215022

செந்தமிழ்

தொகுதி XXIX May June 1931

JL
O31m211, N03CH
N31. 29.7
215022

11 SEP 1931

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்" —திருவள்ளுவர்.

தொகுதி—உகூ] பிரஜோத்பத்தி வருஷம் வைகாசிமீ [பகுதி-எ.
Vol. XXIX. May-June-1931. No. 7.

### உள்ளுறை.


| | | |
|---|---|---|
| வெண்பாமாலை யாராய்ச்சி:— | ஸ்ரீமத் டி. என். அப்பண்ணையங்கார் | உகக |
| நன்னூற்சூத்திர விளக்கம், | „ பண்டித சி. த. நாராயணசாமி. | உசரு |
| நாலோகவீரன் :— | „ S R. பாலசுப்பிரமணியன் B.A., L.T. | உருரு |
| மதிப்புரை:— | | உசா0 |
| பாப் பாவினம்:— | உதவிப்பத்திராசிரியர் | கஎ—சு0 |


பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1931.

hu R.JA M. DINAKARA BAHADUR AVL, and
by THRU. NARAYANA IYENGAR, at the
an Power Press, No. 54, New Jail Road, Madura.

215022

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராதிபர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும் பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ், செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும் இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.

# விளம்பரம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால் சமீபத்தில் அச்சிட்டு விற்பனைக்குச் சித்தம் செய்துவைக்கப்பட்டுள்ள புத்தகங்களின் விலை முதலிய விவரக்குறிப்பு:—

| | | |
|---|---|---|
| 1. வைத்தியசாரசங்கிரகம் (இரண்டாம்பதிப்பு) | ரூ. | 5—0—0 |
| 2. மாறனலங்காரம் | ,, | 4—8—0 |
| 3. வில்லிபாரதம் | ,, | 4—0—0 |
| 4. அகப்பொருள்விளக்கம் | ,, | 1—4—0 |
| 5. திருவாரூருலா. | ,, | 0—8—0 |
| 6. திணைமாலை நூற்றைம்பது. | ,, | 0—8—0 |
| 7. சேதுநாடுந் தமிழும். | ,, | 0—6—0 |
| 8. பொருளதிகார ஆராய்ச்சி. | ,, | 1—4—0 |
| 9. கூடற்புராணம் (முதற்பதிப்பு) | | 0-10-0 |
| 10. மதுரைத்திருப்பணிமாலை (மூன்றாம்பதிப்பு) | | 0—8—0 |
| 11. பன்னூற்றிரட்டு (நான்காம்பதிப்பு) | | 3—0—0 |
| 12. அரும்பொருள்விளக்க நிகண்டு (முதற்பதிப்பு) | | 1—4—0 |

தபாற்கூலி வேறு. வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
மதுரை.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.



உ

கடவுள் துணை.

11 SE[illegible]


# செந்தமிழ்.

தொகுதி-உக.] பிரஜோத்பத்தி௵ வைகாசி௴ [பகுதி-எ.
Vol. XXIX. May-June-1931. No. 7.


ஸ்ரீ:

## வெண்பாமாலையாராய்ச்சி.


[மதுரை, ஸம்ஸ்க்ருதகாலேஜ் ஆசிரியர்,
ஸ்ரீமாந் T. N. அப்பனையங்கார் எழுதியது.]


[[illegible]-ம் பக்கத் தொடர்ச்சி.]

[துடிநிலை]

துடிகொட்டுவானது நிலைமையைச் சொல்வது துடிநிலை எனப்படும். துடி யென்பது ஒருவகைப் பறை. அப் பெயர் இங்கு அப் பறையறைவானை உணர்த்திற்று. அவன் நிலையினைச் சொல்வதாவது: வெட்சிவீரன் தனக்கு வழிவழியாகத் துடியியக்கிவரும் அவனது பண்பினைப் பாராட்டுதல் என்க.

மறவனது குடியும் துடியனது குடியும் இன்னதற் கின்னதென்னும் வரையறவோடு, தொன்றுதொட்ட மரபால் தொடர்புற்றுவருதல் பண்டைக்கால வழக்கு. இதனை, "தொடுகழன் மறவர் தொல்குடி மரபிற், படுகண் ணிமிழ்துடிப் பண்புரைத் தன்று" என்னும் இத்துறைப் பாட்டின் கொளுவினால் அறியலாம்.

மேலே நிறுத்திய இரண்டு துறைகளும் புலனறிந்தோர்க்கும் புள்ளுரைத்தோர்க்கும் செய்ந்நன்றி கருதிச் சிறப்புச்செய்தல் கூறினாற்போல, இதுவும் துடியனது நிலைக்கு மனமுவந்த வீரன் செய்ந்நன்றிகூறிச்

சிறப்பித்தலைச் சொல்லுவதாம். ஆகையால் இஃது அவற்றின்பின் வைக்கும் அமைவுடையதாயிற்று. இது நிற்க.

இத்துறையினை வெட்சித்திணையின் புறன் எனத் தொல்காப்பியம் வகுத்திட்டது. "மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த, கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே" (புறத். 4) என்றது காண்க. இதனுள் 'புறன்' என்பதற்குப் புறனடையெனப் பொருளுரைத்தார் நச்சினார்க்கினியர். அடியார்க்குநல்லாரும் அங்ஙனமே கொண்டார் (சிலப். வேட்டு.) உரையாசிரியர் வேறு கூறினர். ஆயினும் இதனைப் புறனடையெனக் கொள்வதன் கருத்து இங்கு விரித்துரைக்கத் தக்கது.

துடியனாவான் போர்க்களத்தில் மறவனது வீரம்பெருகத் துடி கொட்டுதலைத் தொழிலாகவுடையன். ஆசிரியர் தொல்காப்பியர், "மறங் கடைக் கூட்டிய துடிநிலை" என்று அடைச்சொற் புணர்த்ததே இதற்குச் சான்று. போர்நிகழ்ச்சியினிடையே மனத்தளர்ச்சியுறுதலால் மறவனது வீரம் பழுதுபடாதவாறு, துடியன் தன் தொழில்வன்மையால் அதனைக் கடைபோகக் கைகூட்டுவிப்பன் என்க. அன்றியும் வேல் முதலிய படைக்கலங்களைக் கொண்டுசென்று தனக்குரியவீரனுக்குக் கொடுத்தலும் இவனதுகடமையென, "துடியன் கையது வேலே" (285) என்னும் புறப்பாடற்பகுதியான் உய்த்துணரலாவது. இவற்றால், போர் தொடங்குங்காற்றொட்டு அது முற்றுப்பெறுமளவும் வீரனுக்குத் துடியன் துணையாகிநிற்பன் என்பது விளங்கும்.

இங்ஙனமே இவ் வெண்பாமாலையில் இத் திணையின் முதல் நடு இறுதியாகிய இடங்களில், "ஆரதர் செல்வான் துடிபடுத்து வெட்சி மலைய" எனவும், "மையணற் காளை மகிழ்துடி" எனவும், "அங்கட் கிணையன் துடியன் விறலி பாண்" எனவும் துடியனது இணைபிரியாத இயைபு குறிக்கப்பெறுதல் காணலாம். மற்றுள்ள துறைகளையும் இவ்வாறு துடியனோடு தொடர்புறுத்து விசேடித்தல் கூடும். அப்பொழுது அது அவ்வவற்றின் வீரச்சுவையை விளக்கமுறச்செய்வதாம்.

ஆகவே இத்திணையின் அடிமுதல் முடிவரையுள்ள பலதுறைகளோடு கலந்து பரந்துநிற்கும் இயல்பினால், இத்துடிநிலை இவ்விடத்திற்கு மிகவும் இன்றியமையாததாய்ப் பெருமையுறுகின்றது. இத்



தகைய சிறப்பு வெளிப்படுதற்கென்றே இந்நூலாசிரியர் இதனைப் "பெருந்துடிநிலை" என விசேடித்தாராவர். அன்றியும், வெட்சிவீரனுக்குக் கண்கண்ட துணையாய் அவன் மறத்தினைக் கடைக்கூட்டும் துடியனதுநிலை, அங்ஙனம் அவற்குத் தோன்றாத்துணையாய் வெற்றி விளைக்கும் கொற்றவையதுநிலையினோடு ஒருவாற்றான் ஒத்தசிறப்புடையதென்பது தோன்ற, ஆசிரியர் தொல்காப்பியர், இருதுறைகளையும் ஒருசேரத் தொகுத்து வெட்சிப்புறன் என வேறாக ஓதினர் என்க.

இதுகாறுங் கூறியவற்றால், வெட்சிவீரனோடு மரபுநிலைதிரியாது போர்த்துணை புரிதல் துடியனது தொழிலென்பதும், அவனது பண்பினைப் பாராட்டும் இத்துறை வெட்சித்திணைமுழுதும் விரவிய பொருளுடையதென்பதும், இது தன்சிறப்பினால் ஏனைத்துறைகளினும் வேறாக எண்ணற்பாற்றென்பதும், அல்லாக்கால் இதன் அகன்றுபட்ட பொருள்முழுவதும் ஓரளவினடங்கி ஒடுங்கிவிடுமென்பதும், அதுபற்றியே தொல்காப்பியம் இதனை வெட்சிப்புறன் என வேறுகூறிற்றென்பதும் பிறவும் விளங்கிக்கிடந்தன.

இவையெல்லாம் இங்ஙனமாகவும், உரையாசிரிய ரிளம்பூரணர், "மறங்கடை கூட்டிய குடிநிலை சிறந்த, கொற்றவை நிலையு மத்திணைப் புறனே" என வேறுபாடங்கொண்டதுமன்றி, 'புறன்' என்பதற்குக் "குறிஞ்சித்திணைப்புறனாகிய வெட்சித்திணையாம்" எனப் பொருளெழுதினர். அன்றியும், அவர் குடிநிலை என்பது குடியினது நிலைமை என்றும், அது மைந்தர்க்கும் மகளிர்க்கும் பொது என்றும், அவற்றுள் "ஆண்பால்பற்றிவந்ததனை இல்லாண்முல்லையெனவும் பெண்பால்பற்றி வந்ததனை மூதின்முல்லையெனவும் கூறுப" என்றும் நச்சினார்க்கினியரொடு மாறுகொளவுரைத்தார். இவ்வுரைபொருந்துவதாயினுமாக, பொருந்தாதாயினுமாகுக; ஈண்டைக்கு ஆராய்ச்சியின்று.

அற்றேல் வெண்பாமாலையுடையாரும் இத்துடிநிலையை வெட்சிப் புறனடையென வேறாகவோதிற்றிலர் எனின், அற்றன்று. அவர் அதனை வெளிப்படக்கூறாராயினும், அக்கொள்கை அவர்க்கு உடன்பாடேயாம். "பெருந்துடிநிலை" என அவர் இதனைச் சிறப்பித்ததும், ஏனைத்துறைகளின் வேறாய் இதுமுதலாயவற்றை, அவர் படலத்திறு

திக்கட் டந்து நிறுத்தியதும் ஆகிய காரணங்களால் அவரது உட்கோள் உய்த்துணரப்படும்.

அன்றியும், இவ்வாசிரியர் வெட்சிப்படலத்துத் திணைதுறைகளை ஒருங்குவைத் தெண்ணிய சூத்திரத்தின்முடிவில், "எட்டிரண் டேனை நான்கொடு தொகைஇ, வெட்சித் திணையுந் துறையு மாகும்" எனக் கூறியதன் கருத்து ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. இங்கு எட்டிரண் டென்றது, வெட்சியரவமுதற் கொடையீறாகத் தொல்காப்பியர் கொண்ட துறை பதினான்கனோடு புலனறிசிறப்பு பிள்ளைவழக்கு என இரண்டுகூட்டி முடித்தலைக்கருதி இவர் தாம் கொண்ட பதினாறு துறைகளை என்க. ஏனை நான்கென்றது, இவற்றின்வேறாய் இத் திணைமுழுதும் சேறலேயன்றி ஏனைத்திணைக்கும் இயைபுடைமை நோக்கித் தொல்காப்பியர் 'வெட்சிப்புறன்' எனவும் பிறவாறும் வழங்கிய துடிநிலை, கொற்றவைநிலை, வெறியாட்டு என்னும் மூன்றனோடு, இவற்றை யெல்லாம் அகப்படுத்தி நிற்கும் திணை யொன்று கூட்டி இவரால் நான் கென்று எண்ணப்பட்டவற்றை என்க. எனவே இவற்றை இருபகுதிப் படுத்த இவ்வாசிரியரின் கருத்து எளிதிற் புலப்படுவதாம்.

அற்றேல் அஃதாக; இவர் திணையையும் அதன் பாட்டையும் இவற் றொடுசேர இறுதியில்வையாது, முதற்கட்கூறினாலோ எனின், அவற் றிற்குச் சிறந்தவிடம் அதுவேயாகலின் அங்ஙனஞ்செய்தா ரென்பது. அம்முறைபற்றியன்றே சூத்திரத்திறுதியிலும் இவர் "திணையுந்துறையு மாகும்" எனத் திணையினை முற்கூறியதூஉம் என்றுணர்க.

ஆகவே, இத்துடிநிலையைத் தொல்காப்பியம் புறனடை யென்று வழங்கியது இவ் ஐயனாரிதனார் அறியாததன்று; ஆயினும் தாம் மேற்கொண்ட முதனூற்றுணிவுபற்றி இதனையும் வெட்சித்திணையின் உள்ளுறுத்து ஏனைத்துறைகளோடு இவர் ஒருநிகராகத் தொகுத்திட்டா ரென்க. இஃது ஒருபுறம் நிற்க.

மறக்களத்தில் துடியனேயன்றிப் பாணனும் கிணையனும் படைக் கலமுதலியன தாங்கி வீரனுக்கு உடனிருந்துதவுதல் "பாணன் கையது தோலே" (புறம் 285) என்பது முதலியவற்றாற் போதரலின், அவரைப் பாராட்டுதற்கும் இங்ஙனம் தனித்துறைகள் அமைக்கற்பாலன எனின்; அவரெல்லாருள்ளும் துடியனுக்கே அத்தொழில் மிகச் சிறந்ததென்க.



அன்றியும், குடியொடு கோடா மரபினால் உடனுயிர்நீக்குமளவும் வீர னுக்கு உறுதுணையாகும் உரிமையுடையான் அவன் ஒருவனேயாகலா னும் இத்துறையே ஈண்டுச் சிறப்பாக எடுக்கப்பட்டதென்பது. அல்ல தூஉம் இதனைக்கூறியது பிறவற்றிற்கும் உபலக்கணமாகுமோ என்பதை ஆராய்ந்துகொள்க. இஃது அக்காலவழக்கமாய் இன்றொன்று வீழ்ந் தொழிந்தமையின் அறிதற்கரிதாகின்றது.

இனி, கொடையெனுந்துறையில் "கிணையன துடியன் விறலி பாண்" என இரவலருள் ஒருவனை இத்துடியனை எண்ணினார்; இங்ங னம் அவனை வேறாகச் சிறப்பித்த தென்னை எனின்: ஆண்டுக் குறித்த துடியன் பொதுவகையான் எல்லார்க்குந் துடிகொட்டி இரந்துண்வாழ்க் கையுடையன்; இவன் அவனின் வேறுவன் என்க. அல்லதூஉம் இரு வரும் ஒருவரேயெனினும் குற்றமின்று. அங்குக் கொடையினைச் சிறப் பிப்பான்வேண்டி ஏற்றத்தாழ்வின்றி எல்லார்க்கும் ஒக்க வழங்கினமை கூறப்பட்டது. இங்கு அவருள் துடியனைச் சிறப்பித்தலே கருத்தாய் வழிவழியாகவந்த அவனது குடிப்பெருமை கொண்டாடப்பட்டதென்க.

இனி, இத்துறையின் வரலாற்றுச் செய்யுளில், 'முந்தை முதல்வர் துடியர் இவன்முதல்வர்; எந்தைக்குத் தந்தை; இவன் எனக்கு,' என் பது, 'ஒருவர் ஒருஞான்று செய்த வுதவியை உள்ளுதற்கு எழுமை யெழுபிறப்பும்வேண்டும்; இவர் தலைமுறைதலைமுறையாக எமக்குச் செய்துவரும் நன்றியைநினைந்து எங்ஙனம் கைம்மாறு ஆற்றுவல்' என்று வீரன் தனது உள்ளக்கருத்தைக் குறிப்பானுணர்த்தியவாறு.

'வந்த குடியொடு கோடா மரபினோற்கு' என்றது, 'என் தந்தை முதலாயினார்க்கு இவன்தந்தை முதலாயினார் போர்க்களத்தே உடனுயிர் துறந்து புகழுடம்பு நிறுவினாற்போல, குடிமுறைமைபிறழாது என்னைப் பேணித் தொழில்புரிதலால் எனக்குயிரொன்னப்பட்டு என்னலாற் பிறரை யில்லானாகிய இவற்கு' என்றவாறு.

'இன்னும் வடியுறு தீந்தேறல் வாக்கு' என்றது, கள்விலையாட்டியை நோக்கிய வெட்சிமறவன்கூற்றாகக் கொள்க. 'இன்னுந் தேறல் வாக்கு'— 'முன்னரே நிறைய வார்த்ததேமென்றமையாது, யான்காண இன்னமும் மதுவினை வார்ப்பாயாக; அதன் விலையையெல்லாம் நீ பெறுகுவை'.

என்றான் என்க. அங்ஙனம் அவன் கூறின அளவிலே, அவள் ஏதோ ஒரு சிறுவிலைக்கள்ளினை வார்த்தாளாக, 'வடியுறு தீந்தேறல் வாக்கு'— 'நீ வார்க்குங்கள் வேண்டா; உயர்நிலையதான வடித்தலுற்ற தித்தித்த மதுத்தெளிவை வார்ப்பாயாக; அதன் விலைப்பொருட்டு யான் இங்கு வரிச்சிலையாற்றந்த வளம் முழுமையும் நினக்கு உரிமையாகக் கடவது.' என்று வீரன் தன் பெருமிதந் தோன்றக் கூறினன் என்க. இத்துணையும் இச்செய்யுளிற் கூற்றானுங் குறிப்பானுங் கொள்ளக் கிடப்பன. பிறவு மன்ன.

இவ்வாற்றான் இப்பொருள் உண்டாட்டென்னுந் துறையாக அமையாதோ எனின், அமையாது. என்னை? எங்ஙனமேனும் துடியனது குடிநிலையைப் பாராட்டலே இங்குக் கோட்பாடாகலின் என்பது.

இனி,

"நித்திலஞ்செய் பட்டமும் நெற்றித் திலகமும்
ஒத்திலங்க மெய்பூசி யோர்த்துடீஇத்—தத்தம்
துடியரோ டேர்ப்புறஞ் சூழ்ந்தார் மறவர்
குடிநிலை பாராட்டிக் கொண்டு"

என்பது இத்துறைக்கு நச்சினார்க்கினியர் காட்டிய பாட்டு. இதனால், போர்முற்றியபின் வீரர் தம்மை ஆடையணிகளால் அலங்கரித்துக் கொண்டு, தத்தமக்குரிய துடியரோடு ஊரினைச் சூழ்வருதலுண்டென்பதும் உய்த்துணரற்பாலது. இது நிற்க.

[கொற்றவைநிலை.]

கொற்றவைநிலையாவது துர்க்காதேவியது அளியினீங்கா அருளியல்கிளத்தல். இதனை, "கொற்றவைக்குப் பரவுக்கடன்கொடுக்குங்கால் அவளது நிலைமைகூறுதல்" என்பர் நச்சினார்க்கினியர். போரின்கண் தமக்கு வென்றியளித்த நன்றியை நினைந்து வீரர் அவளது இயல்பினைப் பாராட்டுவதாகலின் இது மேலைத்துறையோடு இயல்புடையதாகும்.



வெட்சியார்நிகழ்த்தும் மறத்துறைக்கெல்லாம் கொற்றவைக் கடவுள் உற்றதுணையாகலின் அந்நிலையினைக்கூறும் இது திணைமுழுதும் விரவிநிற்றல் வெளிப்படை. அன்றியும் இது வஞ்சித்திணைக்கும் பொதுவாமென்றுகூறுப. ஆகையால் இத்துறையையும் வெட்சிப்புறன் எனத் தொல்காப்பியம் கூறிற்று. இச்சிறப்புப்பற்றியே இவ்வாசிரியரும் இதனை இப்படலத்திறுதியில் தந்துவைத்தாரென்க.

முருகவேளன்றிக் கொற்றவையுங் குறிஞ்சிக்குரியதெய்வமாமென்றார் உரையாசிரியர். வெட்சி குறிஞ்சிப்புறனாகலின் அக்கடவுளை வழிபடுதல் இவ்விடத்திற்கு அமைவதாயிற்று. இது நிற்க.

வெட்சிவீரர் கொற்றவையைப் பாராட்டிப் பரவுக்கடன் செலுத்தும் சிறப்புக்களெல்லாம் சிலப்பதிகார வேட்டுவவரிபோன்ற இடங்களிற் கண்டு இன்புறற்பாலன. அங்ஙனம் அவர் கடன் செலுத்துதலில் முதன்மையாக இரண்டுவகை யுண்டு. அவற்றுளொன்று 'உயிர்ப்பலி' என்றும், மற்றொன்று 'குருதிப்பலி' என்றும் பெயர்பெறும்.

"நச்சிலைவேற் காளைக்கு நாளையே கொற்றவை
கைச்சிலையு நல்கும்யாங் காணேங்கொல்—மிச்சில்கூர்
வாளின்வாய்த் தீண்டாத வார்குருதி மெய்சாய்ப்பத்
தாளின்வாய் வீழ்த்தான் றலை.

என்பது உயிர்ப்பலி.

"ஆடிப்பண் பாடி யளவின்றிக் கொற்றவை
பாடியுட் பாடிப் படுத்தவர்—தாடிய
தோளுழலை யாடுவோன் றோளினுந் தூக்கமைந்த
தாளுழலை யாடுவேன் றான்"

என்பது குருதிப்பலி.

இங்ஙனமாக வரும் இலக்கியங்க ளெல்லாம் கொற்றவைநிலை யென்னும் இத்துறையின் உட்பகுதிகளாக அடங்கற்பாலன. இவ்வுண்மை

நச்சினார்க்கினியத்தாற் றெளிந்தது. பொதுவாகப் 'பலிக்கொடை' எனப் படுவதும் இதன் வகைகளுள் ஒன்றெனக் கொள்க.

"துண்ணென் றுடியொடு துஞ்சூ றெறிதரு
கண்ணி லெயின ரிடுகட் னுண்குவாய்
விண்ணோ ரமுதுண்டுஞ் சாவ வொருவரு
முண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய்" (சிலப். வேட்டு.)

என்பது போல்வன இதற்கு உதாரணம்.

இங்ஙனம் வெற்றிபெற்ற வீரர் கொற்றவைக்குப் பரவுக்கடனிறுத் தலைபோல, முன்னதாக அவர் அவளை வணங்கி வழிபட்டுப் பரவுக்கடன் பூண்டலும் உண்டு.

"மறைமுது முதல்வன் பின்னர் மேய
பொறையுயர் பொதியிற் பொருப்பன் பிறர்நாட்டுக்
கட்சியுங் காந்தையும் பாழ்பட
வெட்சி சூடுக விறல்வெய் யோனே" (வேட்டு)

என்னும் சிலப்பதிகாரம் இதற்கு எடுத்துக்காட்டு. அதுவும் இத்துறையின் விரியாய் அடங்குமென்க. அடியார்க்குநல்லாரும் அவ்விடத்தில் இக்கருத்தேபடவுரைத்தனர். அவர் அங்குக்காட்டிய உதாரணச்செய்யுள்,

"வந்த நிரையி னிருப்பு மணியுட
னெந்தலை நின்றலை யாந்தருது—முந்துநீ
மற்றவை பெற்று வயவேந்தன் கோலோங்கக்
கொற்றவை கொற்றங் கொடு"

என வரும். பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

இனி, வெண்பாமாலையிற் காணும் இதன் வரலாற்றுச்செய்யுளில், வெட்சிவீரனுக்குத் துணையாகக் கொற்றவை நிற்கும் நிலையினைப் புகழ்ந்து பாராட்டிய அளவே அமைந்துள்ளது. இக்கூற்று அவட்குப் பரவுக்கடன் செலுத்தியவழி நிகழ்ந்ததென இத்துறைக்கேற்ப உய்த்துரைக்கத்தக்கது.



இதனுள், 'ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்—கூளி மலி படைக் கொற்றவை' என்பது, மீளிக்கு அருள்சுரந்த கொற்றவை அடையார் முரண்முருங்க முந்துறும்பொழுது அவள் தான் சேறல் மட்டுமன்றி யாளிக்கொடி முதலாகத் தன் பரிகாரங்களாயுள்ளவற்றையும் ஒன்றொழியாமே கொண்டுசெல்வ ளென்னும் வியப்புணர்நின்றது. இதனாற் போந்தது, வீரனுக்கு அவள் தன்னை உரிமையாக்கியதேயன்றித் தன் உடைமையையும் உரிமையாக்கினள் என்பதாம். இக்கருத்தே பற்றி, "கொள்ளுங் கொடியெடுத்துக் கொற்றவையுங் கொடுமரமுன் செல்லும் போலும்" என்றார் பிறரும் (சிலப் வேட்டு). ஆண்டுக் கொடியைக்கூறியது படைமுதலியவற்றிற்கும் உபலக்கணம்.

'மீளி அரண்முருங்க ஆகோள்கருதின் அடையார் முரண்முருங்கத் தான்முந்துறும்' என்றது, அடையார் முரண்முருங்க அவன் ஆகோள் கருதினனாயின் அக்கருத்தினும் முந்துற அவ்வினைமுடித் தற்கு அவள் தான் அங்கு எழுந்தருள்வள் என்றவாறு. அடையார் என்பதை இரண்டிடத்துங் கூட்டுக. அறப்பெரியளான ஐயையும் மீளியின்பொருட்டு அறவும் எளியளாய்நின்று அருள்செய்யும் அருமைதான் என்னே! என்பது கருத்து. இங்ஙனம் அவளை எளியளாகப் பெறுமாறு அவன் அவளை இடையீடில்லாத அன்புடன் வழிபடுதலுடையான் என்க. எனவே சென்றபோர்தோறும் வென்றியே புனைபவன் என மறவனது வீரமும் வெளிப்படுதல் காணலாம். கொற்றவைக் கடவுளின் அளவிறந்தகருணையைப் பாராட்டலே கருத்தாய், மீளி ஆகோள் கருதின் அங்கு அவள் தான் முந்துறும் என றிங்ஙனம் புனைந்துரைத்தது மிகுதியும் சுவைபயந்து நிற்கின்றது. இவ்வாறு அவளைப் புகழ்ந்தமைகூறவே அவட்குப் பலிக்கொடை தந்து பரவியது முதலான பிறநிகழ்ச்சிகளும் தாமே போதருமென்க.

[வெறியாட்டு.]

இனி, மறக்குடிமகளிர் தாம் நினைத்தவினை முடிந்தமைக்கு முருகவேளைப் பரவுவாராய் வேலனொடு விரும்பிக் கூத்தாடுதல் மரபு. இது வெறியாட்டென்று பெயர்பெறும்.

## செந்தமிழ்

வெறியென்பது தெய்வத்தின் ஆவேசம் என்ப. அல்லதூஉம் அது நறுநாற்றத்தை உணர்த்தும். ஆகையால் அதனை மெய்யிலே நிறுத்தி ஆடும் கூத்திற்கு அதுவே பெயராக வழங்கிற்றென்றலுங் கூடும். "காணுதல் தான் முருகு மெய்ந்நிறீஇ" என இதன் வரலாற்றுச் செய்யுளில் வருவதையும், 'நறுநாற்றத்தை உடம்பிலே நிறுத்தி' என ஆண்டு உரைக்கப்பெறுவதையும் நோக்குக.

வேலன் என்பான் முருகபூசைபண்ணுமவன். செவ்வேள்வேலைத் தான் ஏந்திநிற்றலின் இவன் வேலன் எனப்பட்டான்.

குறிஞ்சிக்குச் சிறந்த கடவுள் குமாரவேளாகலின் அவற்கு வழிபாடாற்றுதல் இத்திணைக்கு இன்றியமையாததாம். மேற் கொற்றவையைக் கொண்டாடிப் பரவினாற்போல, இது குமரனைக் கொண்டாடிப் பரவுவதாகையால் அதனையடுத்து வைக்கப்பெற்றது.

இவ் வெறியாட்டு வள்ளிக்கூத்தெனவும் வழங்கும். இதன் பழைய வுரையால் இதனை அறியலாம். அன்றிப் பாடாண்படலத்து வள்ளியென்னுந் துறையுள் வெறியாடலும் வள்ளிக்கூத்தும் ஒன்றென்பதுபட இந்நூலாசிரியரே உரைத்தனர். வள்ளிநாயகியின் கோலங்கொண்டு இக்கூத்து நிகழ்த்தப்படுமாகலின் இங்ஙனம் பெயர்வாய்ந்ததென்பர்.

அற்றேல் அப்படலத்து வள்ளியென்னுந் துறையோடு இவ் வெறியாட்டிடை வேற்றுமை யாதோ எனின், இது வெட்சிப்பொருட்டாகிய நிரைகோடலின் வென்றிகருதி ஆடப்பெறுவது: அஃது இன்னதன்றிப் பாடாண்பொருளே தழுவிவருவதென்க. எனவே இவ்விருதுறைகளின் இலக்கியமும் அவ்வத்திணைப் பொருளோடு அமையுமாறு அடைதொடை புணர்த்து விரிக்கத்தகுமென்பது தானே விளங்கும். இது நிற்க.

ஆசிரியர் தொல்காப்பியர் வெட்சித்திணையின் பின்சார, பொதுவியற்கும் காந்தைக்கும் உரியவாய சில துறைகளை எண்ணி, "இருமூன்று மரபிற் கல்லொடு புணரச்—சொல்லப் பட்ட எழுமூன்று



துறைத்தே" என முடித்துள்ளார் (புறத். 5). அவ்விடத்து "வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்—வெறியாட் டயர்ந்த காந்தள்" எனவும், "வாடாவள்ளி" எனவும் இரண்டு துறைகள் பயின்றுவருகின்றன; அவற்றுட் பின்னையதே இங்கு வெண்பாமாலையிற் காணும் வெறியாட்டெனக் கொள்ளல் பொருத்தமுடையது.

முன்னையதாகிய காந்தளும் வெறியாட்டேயாயினும் இரண்டற்கும் வேறுபாடுண்டு. அது தெய்வத்திற்குச் செய்யும் கடன்களையறிதலைச் சிறப்பியல்பாகவுடையது; அகத்திணைக்கண்ணும் பயின்றுவருவது; ஆண்பாற்கே பெறுவரவிற்று. அன்றியும் அது காந்தட்பூ மிலைந்தாடலல்லது குறமகளாகிய வள்ளியின்கோலங்கொண்டு ஆடப்பெறுவதும் அன்று. இக்காரணங்களால் அது வள்ளி அல்லது வெறியாட்டென்னும் இக்கூத்தின் மறுதலைப்பட்டதென்க.

அற்றேல், தொல்காப்பியங் கூறியாங்குக் கூறாது வெண்பாமாலை இத்துறையினை வெட்சித்திணையின் உள்ளுறுத்துக்கூறியதென்னையெனின், இத்திணைக்கே இது மிகச் சிறந்துகாட்டும் ஒற்றுமைநயம் பற்றியேயாம். ஆயினும், ஐயனாரிதனார் தொல்காப்பியர்கருத்தினை நன்குணர்ந்தாரென்றற்கு, அவர் இதனை "வினைநான்கு" என்றவற்றுள் ஒன்றாக இறுதிக்கண் பெய்துவைத்ததே கரியாமென்க.

இனி, சிலப்பதிகார வேட்டுவவரியில்,

> "கொற்றவை கொண்ட அணிகொண்டு நின்றவிப்
> பொற்றொடி மாதர் தவமென்னை கொல்லோ
> பொற்றொடி மாதர் பிறந்த குடிப்பிறந்த
> விற்றொழில் வேடர் குலனே குலனும்"

என்பது முதலான பாடலைச் சுட்டி, "இவைமூன்றும் 'வாடாவள்ளி வயவரேத்திய' என்பதனால் வள்ளிக்கூத்து; என்னை?

'மண்டம ரட்ட மறவர் குழாத்திடைக்
கண்ட முருகனுங் கண்களித்தான்—பண்டே
குறமகள் வள்ளிதன் கோலங்கொண் டாடப்
பிறமகள் கொற்றாள் பெரிது'

எனவரும்" என்று அடியார்க்குநல்லார் பொருளெழுதியுள்ளார். இதனால் வள்ளியின் கோலங்கொண்டு ஆடுங் கூத்தேயன்றி, கொற்றவையின் கோலங்கொண்டு ஆடுங் கூத்திற்கும் இதுவே பெயரும் இலக்கணமுமாம் என அவ்வாசிரியர் கருதினாரவர். ஆகவே 'வள்ளிக்கூத்து' என்று தொல்காப்பியமும் 'வெறியாட்டு' என்று வெண்பாமாலையும் கூறும் இத்துறை இதுபோன்ற பிறகூத்திற்கும் உபலக்கணமாய் அவற்றை அகப்படுத்திநிற்கும் என்பது வெளிப்படை. அடியார்க்குநல்லார் முத்தமிழ்த்துறையினும் உத்தமப்புலமைவாய்ந்தவராகலின் கூத்தியல்வழக்கினை நன்கறிந்த அவர் இங்குக் கூறியது சிறந்த சான்றாமெனக.

இவையெல்லாம் இங்ஙனமாகவும் உரையாசிரியர் இளம்பூரணர், "வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன் - வெறியாட் டயர்ந்த காந்தள்" என்பதனுரையில் அத்துறையினை விரித்துரைப்பாராய், "அந்நிலத்துள்ளார் வென்றிவேண்டி யாடும் வெறியுங் கொள்ளப்படும்; இவ்வெறி இந்நிலத்திற்குச் சிறந்தமை அறிக.......வென்றிவேண்டியாடுதற்குச் செய்யுள் சிலப்பதிகாரவேட்டுவவரியுள் கண்டுகொள்க" என்று எழுதிச் சென்றார். வேட்டுவவரியிற் பயின்றுவருவது காந்தளென்னும் வெறியாட்டென்று அவர் கருதிக்கூறியது ஐயப்படுதலுடைத்து. ஆயினும், அவருரை ஈண்டைக்கு அமையுமேல் ஆராய்ந்துகொள்க. பிறவும் அன்ன. விரிப்பிற் பெருகும்.

வேட்சிப்படலம் முற்றுப்பெற்றது.



உ

# நன்னூற் சூத்திர விளக்கம்.

"இ ஈ ஐ வழியவ்வுமேனை
யுயிர்வழி வவ்வுமே முனிவ்விருமையும்
உயிர்வரி னுடம்படுமெய்யென் றாகும்."

இச்சூத்திரத்தா லுயிர்முன் னுயிர்வந்தா லவை புணருமாறுணர்த்தப்படுகின்றது.

இகரம், ஈகாரம், ஐகாரம் ஆகிய இவற்றின்முன் உயிர்வந்தால் யகரமெய்யும், ஏகாரத்தின்முன் னுயிர்வந்தால் யகரமெய்யும் வகரமெய்யும், மற்றைய வுயிர்களின்முன் னுயிர்வந்தால் வகரமெய்யும் உடம்படுமெய்யாக வருமென்பதே இச்சூத்திரத்தின் பொருளாகும்.

ஏனைய வென்றது, இ, ஈ, ஐ, ஏ என்னு மிவைகளல்லாத அ, ஆ, உ, ஊ, எ, ஒ, ஓ, ஔ வென்னும் இவ் வெட்டுயிர்களையுமேயாமென்பது வெளிப்படை.

இங்ஙனங் கூறியவாற்றானே, எகரவினா முன்னும் அகரம் உகரமாகிய சுட்டிடைச்சொற்கள்முன்னும் உயிர்வந்தாலும் வகரமெய் வருமெனத் தெற்றெனவிளங்கவும் 'எகரவினா முச்சுட்டின் முன்னர்' என்னுஞ் சூத்திரத்தாற் பின்னும் வகரம் பெறுமெனக்கூறுதல் எற்றுக்கெனின், இகரச்சுட்டாகிய இடைச்சொன்முன் னுயிர்வந்தால் யகரத்தோற்றமின்றி வகரத்தோற்ற முளதாதலின் அதனை யுணர்த்தப்புகுந்தவர் அதனோடொத்த அகர உகரச் சுட்டிடைச்சொற்கள்முன்னரும் எகர வினாவிடைச்சொன்முன்னரும் மாறுதலின்றி வகரமே தோன்றுமென ஐயந்தெளியவுணர்த்துபவராய் இகரத்தோடு மற்றைய இடைச்சொற்களையும் சேர்த்து 'எகரவினா முச்சுட்டின் முன்னர்' என வகரத்தோற்றத்தை மீண்டுங் கூறினானன்றி வேறின்று.

இகரச்சுட்டோ டொத்தன அகர உகரச் சுட்டிடைச் சொற்களாமன்றி எகர வினாவிடைச்சொல்லன்றாகலானும், இகரச்சுட்டிடைச் சொன்முன் மாறி வகரந்தோன்றுதலை விதிக்கின் அதன்முன் முற்சூத்திர

விதிப்படி யகரந்தோன்றுதலில்லையென வுணருவானன்றி அகர முதலிய இடைச்சொற்களின்முன் வகரந்தோன்றுமோ மாறி யகரந்தோன்றுமோ வென ஒருவரும் ஐயப்படாராகலானும் மீண்டும் எகரவினா முச்சுட்டின் முன்னர் உயிர்வரின் வகரந்தோன்றுமெனக் கூறியது, கூறியதுகூறலே யாம் எனின் எகர வினா முதலிய நான்கிடைச்சொன்முன்னும் வன்கண முதலிய மற்றைக்கணம் வந்தாற் புணருமாறுணர்த்தத்தொடங்கியவர் உயிர்வந்தாற் புணருமாற்றையுஞ் சேர்த்துக்கூறினர்; நன்குவிளங்குதற் பொருட்டென்க.

எகரமுதலிய நான்கிடைச்சொன்முன்னும் மற்றைக் கணங்கள்வந் தாற் புணருமாற்றை முன்னுணர்த்திப் பின் இகரச்சுட்டின்முன் னுயிர் வந்தால் வகரந்தோன்றுதலைமட்டும் அதனொடு தனித்துணர்த்தினும் எகர முதலிய மூன்றிடைச்சொன்முன்னும் வகரந்தோன்றுமெனவும், இகரச்சுட்டின்முன்னும் வகரந்தோன்றுமெனவும், மற்றையன வந்தால் இன்னவாமெனவும் நன்குபுலப்படாதுபோகா தாகையான் மேற்கூறி யது பொருந்தாது எனின், எகரமுதலிய நான்கிடைச்சொன் முன்னரும் யகரம் வந்தாலும் வகரம்பெறுமென விதித்தலான் 'இ, ஈ, ஐ வழி யவ் வும்' என்னுஞ் சூத்திரத்தான் விதித்த வகரம் வேறு 'எகரவினா முச் சுட்டின் முன்னர்' என்னுஞ்சூத்திரத்தான் விதிக்கப்படும் வகரம் வேறென் றறிந்து சூத்திரங் குற்றமிலதாதலை யறிக.

'ஆவியாமுன் வன்மைமிகா'

'ஆவியாழிறுதி முன்னிலைவினை'

'உயிர்வரி னுக்குறள் மெய்விட்டோடும்
யவ்வரி னியாம்'

"இ ஈ ஐவழி யவ்வும் ஏனையுயிர்வழி வவ்வும்"

'உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே'

'தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்'

"தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிகரந்
துன்னு மென்று துணிநரு முளரே"



"ஞணநமலவளன வொற்றிறு தொழிற்பெயர்
ஏவல் வினைநனி யவ்வன்மெய்வரின்
உவ்வுறு மேவ லுறுசில சில்வழி"

"அவ்வழி, ஆவி யிடைமை யிட மிடறாகும்"

எனவருஞ் சூத்திரங்கள்முதலியவற்றைக்கொண்டு ஆயுங்கால் யகரம், புணர்ச்சிமுதலியவற்றில் உயிரையொத்து நடப்பதாமென்பது உள்ளங் கைநெல்லிக்கனிபோல நன்குபுலப்படுதலின், சில வுயிரீற்றின்முன் உயிர்புணருங்கால் வரும் வகரவுடம்படுமெய் யகரம்வந்துபுணருங்கால் வரின் அஃது உடம்படுமெய் யென்னும் பெயரொன்றுமொழிய நிற்கு மன்றி வேறு வகரமெனக் கூறலை ஏற்காது. யகரத்தின்முன் வரும் வகரம் வேறுவகரமேயெனினும் அங்ஙனமாகுக; உயிர்வரும்வழி அவ் வகரம்போன்றுவரும் வகரம் உடம்படுமெய்யின் வேறுமெனக் கூறுவத னாற் பயனொன்றுமிலதாமாதலின் புனருத்தியென்பதற் கைய மென்னையோவெனின், உடம்படுமெய்யாயிருந்தால் உயிர்வரி னிரட்டி யாது; இஃதிரட்டித்தலால் உடம்படுமெய்யல்லாத வகரமேயாமென்க.

தனிக்குறின்முன்னொற் றேதாயினு மிரட்டிக்குமென முன்னர்ச் சூத்திரஞ்செய்துளராதலானும், உடம்படுமெய் தனிக்குறின்முன்னொற் றாய் வாராதென்னுங்கொள்கை யாண்டுங் காணப்பட்டிலதாகலானும் எகர வினா முச்சுட்டின்முன் வரும் வகரம் தனிக்குறின்முன்னொற்றானமை யின் உடம்படுமெய்யாகாதெனச் சாதிக்கவெடுத்த அக்காரணஞ் சாலாது. அன்றியும் 'நொ' 'து' என்னும் இவ்வோரெழுத்தொருமொழிக ளின்முன் உயிர்வந்தால் வரும் வகரவுடம்படுமெய்யும் தனிக்குறின்முன் னொற்றாய் நொவ்வழகா துவ்வழகா என இரட்டித்தவாறும் வெளிப் படையன்றோ?

ஆகையான் இவ்வகரம் உடம்படுமெய்யன்றெனல் பொருந்தாது; எனின், 'இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்' எனப் பின் சூத் திரஞ்செய்தலானும், அச்சூத்திரங்கொண்டே,—

"அன் ஆன் அல் ஆல் அற்றிற் றத்தம்
தம்நம் நும்ஏ அஉ ஐகுன
இன்ன பிறவும் பொதுச்சாரியையே"

என்னுஞ் சூத்திரத்தில் 'அ உ' என்னுஞ் சாரியையிடைச்சொற்கள் உடம்படுமெய் பெறாது வந்தனவென அறியப்படுதலானும் எகரவினா முதலிய இவ் விடைச்சொற்களும் வகரவுடம்படுமெய்யைப் பெறாது வருமோ என ஐயந்தோன்றுமாதலின் 'அதனைக் கடியப் பின்னும் 'எகர வினா முச்சுட்டின்' என்னுஞ் சூத்திரத்தான் வகரம் விதித்தாரென்க.

'இ ஈ ஐ வழி யவ்வும்' என்னும் சூத்திரத்தால் எய்தியவிதியைப் பெறாது வருபவைகட்கே புறனடைவிதியாமன்றிப் பெறுமவைகட்கு விதியன்றாமாகலானும், புறனடையைக் கண்டும் உடம்பொடுபுணர்த்தலான்வருவனவற்றைக்கண்டும் ஐயமெய்துமெனின் மற்றைய இடைச்சொற்களையும் எடுத்துக்கூறி ஒழிக்கவேண்டுமாகலானும் அது பொருந்தாதெனின், இகரத்தின்பின்னு மிவ்வகாரமே வருதலின் இவ்வகரம் உடம்படுமெய்யன்றென்பது நன்கு விளங்கவில்லையா? அதனாற்றான் வேறு கூறினாரென்க.

இடைச்சொற்களும் உரிச்சொற்களும் சொன்னவிதி கடந்துவருவதுண்டென்பது வெள்ளிடைக்கல்லென விளங்குவதொன்றற்றே? மாவென்னுமுரிச்சொன்முன் இரு என்னுஞ்சொல்வந்தால் மாவிருவெனக் கூறியவிதிபெறாது மாயிரு வென யகர வுடம்படுமெய் பெறுதல்போல, இ என்னும் இடைச்சொன்முன் உயிர்வந்தால் இய்யுயிர் இய்யுலகம் எனக் கூறியவிதிபெறாது இவ்வுயிர் இவ்வுலகம்என வகரவுடம்படுமெய் பெறும்.* அங்ஙனம் பெறுதலையுங்கூடத் தனித்துச் சூத்திரமுகத்தானுணர்த்துதல் வேண்டியதில்லை. என்னை? மாயிருவென்பது புறனடைச்சூத்திரவிதியைப் பற்றுக்கோடாகக்கொண்டு நடப்பதுபோல இஃதும் நடக்குமாதலின். ஆகையால் இகரம் வகரம் பெறுதலால் இகரமல்லாத மற்றைய எகரவினாமுதலிய மூன்றிடைச்சொற்களின்முன் வரும் வகரம் உடம்படுமெய்யாகாது எனப் பேச இடமில்லையென்பதும் போதருமன்றே. ஆதலான் மீண்டும் நான்கிடைச்சொன்முன்னுமுயிர்வந்தால் வகரம் பெறுமென விதித்தது பொருந்ாதெனின், 'இ, ஈ,

*சேனாவரையர் 'உயர்திணையென்மனார்' என்னுஞ் சூத்திரத்து 'வரையறையின்மையின் யகர முடம்படுமெய்யாயிற்று' என வுரைத்தனர். எனவே நீண்ட சுட்டின்முன் வரும் யகரத்தை யுடம்படுமெய்யெனக்கொண்ட அவர்க்கு நீளாதசுட்டின்முன்வரும் வகரம் உடம்படுமெய்யாமென்னுங் கருத்துண்டென்பது ஒருதலை.



ஐ வழி யவ்வும்' என்னுஞ் சூத்திரத்தான் எய்தியவிதி அநித்தியமாதலின் யகர வகர வுடம்படுமெய்களைப் பெற்றும் பெறாமலும் உயிர்கள் புணரும். எகரவினா முச்சுட்டுக்களின்முன் வரும் வகரம் நியமமாக வந்தேதீருமென்பதற்கு வேறு விதித்தாரென்க. அநித்தியமாதல் எங்ஙனம் பெறப்பட்டதெனின்; எகரவினா முச்சுட்டுக்கள் வகரம்பெறுமென மீண்டும் விதித்தலாலேயே பெறப்பட்டதென்க. அன்றியும்,

'அ இ உ எ ஒக் குறிலைந்தே'
'ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்'

என்ற சூத்திரங்களிலும்,

'இ ஈ ஐ வழி யவ்வும்'

என அச்சூத்திரத்தும் உடம்பொடுபுணர்த்தலான் உடம்படுமெய்யின்றியுயிர்களைப் புணர்த்தியுள்ளமையானும் பெறப்பட்டதென்க.

இவை விட்டிசைத்தவழி உடம்படுமெய்பெறாது வந்தனவேயன்றி விட்டிசையாவழிப் பெறாது வந்தனவாகாவெனின், 'அ இ உம் முதற்றனிவரிற் சுட்டே' என வருவது முதலியவன்றி, 'ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்' என வருவது முதலியன விட்டிசைத்து நிற்கவில்லையென்க.

இவை மொழியன்றி எழுத்தானமையின் உடம்படுமெய் பெறவில்லையென்றுரைலெனின், மொழியாயி னுடம்படுமெய் பெறும்; எழுத்தாயின் உடம்படுமெய் பெறா என விதந்து கூறினாரில்லையாகலானும், எழுத்தாயினுஞ் சரி எழுத்தலாய மொழியாயினுஞ் சரி, உயிர்முன் னுயிர்வந்தால் உடம்படுமெய் பெறுமென்பது,

'ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே'
'ஆவே யெதிர்மறைக் கண்ணது ஆகும்'
'எயாமுதலும் ஆவோ வீற்றும்
ஏயிரு வழியும்'
'புள்ளிவிட் டவ்வொடு'
'மெலிபும் வவ் வே'
'அ ஆ வக்கரப்புடைய'

எனவருஞ் சூத்திர முதலியவற்றான் அறியப்படுதலானும் அது பொருந்தாதென்க.

மணியழகு என்றேனும் மணி அழகென்றேனும் வழங்கலாம். எவ்வணி அவ்வணி, இவ்வணி, உவ்வணி என வருவனவற்றை எ அணி அ அணி இ அணி உ அணி என வழங்கமுடியாமை காண்க.

ஆகையான் எகரவினா முச்சுட்டின்முன் வரும் வகரம் நித்தியமா மென்பதை யுணர்க.

இவற்றின் முன் யகரம் வரும்வழி வரும் வகரம் உடம்படுமெய் யன்றேனும் வகரவொப்புமைநோக்கிச் சேர்த்துக்கூறினார், சுருங்கச் சொல்லலா மழகுபற்றி யென்க.

மற்றையுயிர்களின்முன் னுயிர் வந்தால் உடம்படுமெய் தோன்றியும் தோன்றாமலும் நிற்பதுகண்டு உடம்படுமெய்பெறுதலின்றியே மொழிகள் தொடருமாறு வழங்கற்க வென்பாராயன்றே,

"எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே
யுடம்படு மெய்யி னுருபுகொள லேன்ப" என்றது,

"எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே
உடம்படு மெய்யி னுருபுகொளல் வரையார்"

என ஆசிரியர் தொல்காப்பியர் கூறினாரென்க.

இச்சூத்திரத்தின்கண் "'வரையார்' என்றதனால் உடம்படுமெய் கோடல் ஒருதலையன்று. கிளி அரிது, மூங்கா இல்லை யெனவும் வரும்." என நச்சினார்க்கினியரும் "'வரையா'ரென்றதனால் உடம்படுமெய் கோடல் ஒருதலையன்றென்பது கொள்ளப்படும். கிளி அரிது மூங்கா இல்லை எனவரும்." என உரையாசிரியரும் கூறியிருத்தலையுங் காண்க.*

'இ, ஈ, ஐவழி யவ்வும்' என்னுஞ் சூத்திரத்து மொழியென்று விதந்து கூறினாரில்லையாயினும் மொழிப்புணர்ச்சியே அச்சூத்திரத் துணர்த்துகின்றார் என்பது, 'மெய்யுயிர் முதலீ றாமிரு பதங்களும்' என்னுஞ் சூத்திரங்கொண் டறியப்படுதலானும் 'ஆவே யெதிர்மறைக் கண்ணதாகும்' என வருஞ் சூத்திர முதலியவற்றில் எழுத்தோடு மொழிபுணருங்காலத்து உடம்படுமெய் தோன்றியுள்ளதேயன்றி எழுத்தோடு

*சொவ்வழகா, தவ்வழகா என்பவற்றையும் சொ அழகா, த அழகா எனவும் உடம்படுமெய்யின்றி வழங்கினும் இனிதியலும்,



எழுத்துப் புணர உடம்படுமெய் தோன்றியதன்றாகலானும், 'மெய்யுயிர் முதலீறாமிருபதங்களும்' என்னுஞ் சூத்திரத்தால் இயல்பாகவும் விகாரப் பட்டும் நிற்றல் பதத்தொடு பதம் புணர்வழியன்றி எழுத்தொடு பதம் புணர்வழியன்றென்பது பெறப்படுமாயினும் 'ஆ வே யெதிர்மறை' என்பது முதலிய சூத்திரங்களால் எழுத்தொடு பதம்புணர்வழியு மவ்வா றாமென வறிவித்துள்ளமையானும், பதமாயவழியன்றி எழுத்துக்கள் புணருங்காலத்திற் புணர்ச்சிவிதி பெறாதென்பது 'இ, ஈ ஐ வழி' என்னுஞ் சூத்திரத்தே யுடம்பொடு புணர்த்தலா னுணர்த்தியுள்ளமையானும் குற்றெழுத்துக்களைத் தனித்து 'அ இ உ எ ஒக்குறி லைந்தே' 'அ இ உம் முதற் றனிவரிற் சுட்டே' எனக் கூறினவற்றை நோக்கின் அவை 'அ இ உண்' என்பதுபோலச் சேர்ந்திசையாது விட்டிசைத்துப் புணராது நிற்ற லறியப்படுதலானும் அ ஆ இ ஈ எனக் கூறினும் அங்ஙனமே புணராது நிற்றலானும் புணரின் அ ஆ வென்பது அவாவெனப் புணர்ந்து வேறு பொருள் தருமாகலானும், சங்கமருவிய நூல்களிலேனும் பிற்காலத்து நூல்களிலேனும் உயிரீற்றுமொழிகளும் உயிர்முதல்மொழிகளும் உடம் படுமெய்பெறாது தொடர்ந்து நடந்த லகப்படாமையானும், மணியழ கென்றது மணி அழகு என உடம்படுமெய்யின்றிப் புணர்த்திவழங்கினு மினிதியலுகின்றவேயெனின், அவை இக்காலத்துப்புலவர் தமிழ்மொழி யுணர்ச்சிநன்குவாய்க்கப்பெறாதார்பொருட்டுப் பிரித்து வழங்கிவருதலைக் கண்டுகண்டு அதன்கண் மனம்படிந்துள்ளமையின் இனிதியலுதல்போற் றோன்றுகின்றனவேயன்றி உண்மையி னியலவில்லையென்பது நுணித்து நோக்கி யுணரப்படுதலானும் உடம்படுமெய்பெறாது வர வழங்கல் குற்றமாமென்பதைப் புலவரெவரும் ஒப்புக்கொள்வரென்ப தொருதலை யாகலானும், அநித்தியமென்றல் பொருந்தாது' 'எகரவினா முச்சுட்டின் முன்னர்' எனச் சுருங்கக்கூறலாமழகுபற்றிக் கூறினாரேனும் எப்புழிக் கோடல் என்பதனால் இகரச்சுட் டிடைச்சொன்முன் னுயிர்வந்தால் வக ரம் தோன்றும்; எகர முதலிய நான்கிடைச்சொன்முன் யகரம்வந்தால் வகர மும், மற்றையவந்தா லவையும் மிகுமெனக்கொள்ளலாமன்றே? எனின்,

"எல்லாமொழிக்குமுயிர்வருவழியே
*உடம்படுமெய்யினுருபுகொளல்வரையார்"

*'உடம்படு மெய்யி னுருவுகொளல் வரையார்' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

எனக் கூறிய ஆசிரியர் தொல்காப்பியனார் சுட்டிடைச்சொற்கள்முன் னுயிர்வந்தால், மற்றைய வுயிரீற்றின்முன் னுயிர்வந்தால் உடம்படு மெய்தோன்ற லொருதலையன்றாதல்போலவன்றி ஒருதலையாக வகரம் வந்தேதீருமென்பதை யறிவித்தற்கன்றே பின்னர் உயிர்மயங்கியலில் அகர இகர உகரவீற்றுப் புணர்ச்சிகூறுங்காலத்து,

'சுட்டின் முன்னர் ஞகமத் தோன்றின்
ஒட்டிய வொற்றிடை மிகுதல் வேண்டும், எனவும்,

"பவமுன் வரினே வகர மொற்றும்" எனவும்,
"உயிர்முன் வரினு மாயியல் திரியாது" எனவும்,
(இவை அகரவீற்றுப்புணர்ச்சியிலுள்ளன)

"சுட்டி னியற்கை முற்கிளந் தற்றே" எனவும்,
(இஃது இகரவீற்றுப்புணர்ச்சியிலுள்ளது)

"சுட்டின் முன்னரு மத்தொழிற் றாகும்"
"ஏனவை வரினே மேனிலை யியல்பே" எனவும்,
(இவை உகரவீற்றுப்புணர்ச்சியிலுள்ளன)

கூறியுள்ளார். இந்நூலாசிரியர் அத்தொல்காப்பியத்தையும் உரையாசிரிய ருரையையும் பெரும்பாலும் பின்பற்றியே நூலியற்றியுள்ளாரென நன்கு விளங்குதலானும் ஈண்டு மந்நூலைப் பின்பற்றியே சூத்திரித்துள்ளார்; எகரமுதலிய நான்கிடைச்சொன்முன் னுயிர்வந்தால் வகரந்தோன்று மென அவர்க்குக் கருத்துண்டு; என ஒருதலையாகக்கூறமுடியுமாக லானும், ஆகையால், ஏற்புழிக்கோடல் என்பதனால் வகரந்தோன்றல், இகரச்சுட்டின்மாத்திரந்தா னென லமையாதாகலானும், மீண்டும் வகரத் தோற்றங்கூறியது முற்கூறியசூத்திரவிதி யநித்தியமாமென்பதைத் தெற் றெனவிளக்கலானும், எழுத்துக்கள் புணர்ச்சிவிதிபெறுதெனத் தாபித்தலா லிதற்குப்பாதகம் பெறப்படாதாகையானும் உடம்படுமெய்பெறாது நிகழ் வன, நுணித்துநோக்கினும் இனிதியறலானும், எல்லாவற்றையும் உடம் படுமெய்பெறாது வர வழங்கல் குற்றமாமன்றிப் பெறாது இனிதியலுவன வற்றை அங்ஙனம் வர வழங்கல் குற்றமாகாதாகலானும், நூல்களிற் காணப்படாதுபோயினும் ஆன்றோர்வழக்கில் உடம்படுமெய்பெறாது



மொழிகள் தொடர்ந்துநிகழுமென்பது உரையாசிரியர் உரையானு மறியப்படுதலானும் முற்கூறிய சமாதானமே சரியானதென்க.*

தொல்காப்பியர் எகரவினாமுன் உயிரும் யகரமும் வந்தால் வகர மும் மற்றையன வந்தால் வந்த அவையும் தோன்றுமென விதியாமை ஆனும் இவர் அதன்முன்னும் சுட்டின்முன்னர்ப்போல நாற்கணமும் வந்தால் வகரமும் வந்த அவையும் தப்பாது தோன்றிநிற்றலைக் [illegible] எகரவினாவையும் சேர்த்துக்கூறினார் என்க.

'இன்றி' யென்னு மெச்சமே செய்யுளுள் உகரவீறாய்த் [illegible] நிற்குமெனத் தொல்காப்பியர் கூறியிருக்க, இவர் 'அன்றி' [illegible] மெச்சமும் அங்ஙனமாதலைக் கண்டு இன்றி யென்பதனோடு சேர்த்துச் சூத்திரஞ்செய்யுங்கால் 'இன்றியன்றி' என்றது ஐயமெய்தாதிருக்க 'அன்றி யின்றியென் வினையெஞ் சிகரம்' எனத் தான் சேர்த்ததை முன் வைத்துக்கூறுதல்போல ஈண்டும் தான்கண்ட எகரவினாவை முன் வைத்து, 'முச்சுட் டெகரவினாவின் முன்னர்' என்றது 'எகரவினா முச் சுட்டின் முன்னர்' எனக் கூறியுள்ளார் என்க.

ஆசிரியர் தொல்காப்பியனார்,

'அஇ உஅம் மூன்றுஞ் சுட்டு'
'ஆஎ ஓ அம் மூன்றும் வினா'

எனவே கூறியுள்ளார். எகரத்தை வினாவாகக்கொள்ளவில்லையாயினும், "'தன்னின முடித்தல்' என்பதனால், எகரமும் யகர ஆகாரமும் வினாப் பெறுமெனக்கொள்க" என உரையாசிரியர் கூறியதை மேற்கொண்டு இவர் எழுத்தியலிலேயே,

† "எயா முதலும் ஆஓ வீற்றும்
ஏயிரு வழியும் வினாவா கும்மே"

என எகரத்தையும் வினாவெனக் கூறியுள்ளா ரென்பதை யறிக.

ஆசிரியர் தொல்காப்பியர்காலத்து வினா எகரம் பயிற்சியில்லை என் பது புலப்படுகின்றது

---

* சேர்ந்திசைத்தலே புணர்ச்சியாமன்றி விட்டிசைத்தல் புணர்ச்சியன்று மாகலான் 'அ அவன் இ இவன் உ உவன் எ எவன்' என்பன புணர்ச்சிவிதி பெறாதவந்தனவென்க.

† ஈண்டும் தானேகூறும் எகர யகரங்களை முன்னர்க்கூறுவது காண்க.

இந்நூலாசிரியர் ஙகரத்தையும் மொழிமுதலில் வருமெனக்கூறினமையின், ஆசிரியர் தொல்காப்பியனார் 'சுட்டின்முன்னர் ஞகரத் தோன்றின்' எனக் கூறியிருப்பதைக் கண்டும் "எகரவினாமுச்சுட்டின் முன்னர்" என்னு மிச்சூத்திரத்தின்கண் பிறவென்பதற்கு ஙகர ககர சகர ஞகர தகர நகர பகர மகரங்களையன்றி ஙகரத்தையும் பொருளாக உரையாளர் எவரும் கூறினர் எனத் தெரிகின்றது.

"நீட வருதல் செய்யுளு ளுரித்தே"

என்பதுள்பட முற்கூறிய பலசூத்திரங்களாற் கூறியவற்றையும், "உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே, அஃறிணை யென்மனா ரவரல பிறவே, ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே" என்னுஞ் சூத்திரமுதலியவற்றிற் கண்ட நீண்ட சுட்டின்முன்னர் யகரத்தோற்றத்தையும் 'சில்வகை யெழுத்திற் பல்வகைப்பொருளைச், செவ்வனாடியிற் செறித்து' என்னுஞ்சூத்திரத்துக்கூறியாங்கே திட்பம் நுட்பஞ்செறிய இவ்வொரு சூத்திரத்தே யடக்கி இனிது விளக்கும் திறம் இறும்பூதுறப்புரிகின்றது.

'தூக்கிற் சுட்டு நீளின் யகரமும்' எனச் சுட்டுநீடலும் யகரத்தோன்றலுமாகிய இருவிதியும் பெறப்படச் சுட்டுநீட லொருதலையன்றென்பதை "நீடவருதல்" என நுண்மையுடையாருணரக் கூறியதுபோலன்றி எண்மையுடையவரு முணருமாறு அத்தொடரிலேயே 'நீளின்' என இனிது புலப்படுத்தும் ஆற்றலுடையசொற்பெய்துரைத்த நயம் புலவருளத்தை மகிழ்விக்குமென்ப தொருதலை.

எகரமுதலிய நான்கிடைச்சொன்முன்னும் தோன்றும் வகரம் உடம்படுமெய்யாமென்ப தறிவித்தற்கு இச்சூத்திரத்தை "உயிர்வரினுக்குறள் மெய்விட் டோடு" மென்னுஞ் சூத்திரத்தின்பிற் கூறாது உடம்படுமெய்கூறும் 'இஈ ஐவழி யவ்வும்' என்னுஞ் சூத்திரத்திற்கடுத்து நிற்கச்செய்தனர் எனத் தெரிகிறது.

(தொடரும்)

இங்ஙனம்,

பண்டித. சித. நாராயணசாமி,

அறுபத்துமூவர்மடம், திருவையாறு.

உ

# நரலோகவீரன்.

பதினொன்று, பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் ஆண்ட முதலாவது குலோத்துங்கன், விக்கிரமசோழன் என்ற சோழ அரசர்களுக்கு மந்திரியாயும் சேனாபதியாயும் விளங்கினவர்களில் நா[illegible] வீரன் ஒருவன்.

## ஆதாரங்கள்.

கூத்தர் பாடியிருக்கும் விக்கிரமசோழனுலாவில் அவருடைய த[illegible]யாகிய அபயன் என்கிற குலோத்துங்கசோழன் சமஸ்தானத்தில் பிர[illegible]மாய் விளங்கிய சேனாதிபதிகளில் இவரைப்பற்றிப் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

"வேங்கையினுங் – கூடார் விழிஞத்துங் கொல்லத்துங் கொங்கத்தும், ஓடா விரட்டத்து மொட்டத்தும் நாடா தடியெடுத்து வெவ்வேறரசிரிய வீரக் கொடியெடுத்த காலிங்கர் கோனும்"

இதைத்தவிர, கீழ்க் குறிப்பிட்டிருக்கும் கல்வெட்டுக்களிலிருந்தும் இவருடையசரித்திரத்தை அறிந்துகொள்ளுகிறோம்.

(1) 374of 08 நெய்வெண்ணெய் (Neyvanai).

குலோத்துங்கனின் 23வது வருஷம். ஜயங்கொண்டசோழமண்டலத்துப் பொற்கோயில் தொண்டைமான வேண்டுகோளின்பேரில் சிலநிலங்கள் சுங்கந்தவிர்த்த சோழநல்லூர் என்ற பேருடன் இறையாகக் கொடுக்கப்பட்டது.

(2) 36909 of சித்தலிங்கமடம் (Siddhalingamadam)

ஜயதரன் என்ற அரசன் காலத்தில் சகவருஷம் 1025இல் மணவிற் கூத்தன் ஒரு விமானமும் பாக்குமரங்களாற் சூழப்பட்ட பிராகாரங்களும் வியாக்கிரபாதராகிய சிவபெருமானுக்குச் சித்தலிங்க மடம் என்ற அக்ராரத்தில் ஒருமண்டபமும் கட்டினார். மானவதாரர், ஈர்த்தகர் என்ற இதர பேர்களும் இவருக்கு உண்டு.

(3) 207 of 23 திருப்புலிவனம் (Tiruppulivanam)

முதலாவது குலோத்துங்கனின் இரண்டாவது வருஷம் மணவிலதிபதியும் அரும்பாக்கக்கிழானுமாகிய பொன்னம்பலக்கூத்தன் என்ற காலிங்கராயன் கோயில்விளக்குக்காகக் கொடுத்த பரிசு 12 கழஞ்சு.

(4) 97 of 1927 திருப்புகலூர் (Tiruppugalur)

விக்கிரமசோழனின் இரண்டாவது வருஷம் க்ஷத்திரியநாத சதுர்வேதி மங்கலத்து மகாசபையார் புகலூர்த்தேவருடைய கோயிலில் உள்ள நரலோகவீரன் மண்டபத்திற் கூடி ஒரு ஆஸ்பத்திரியை நடத்துவதற்கு ஏற்பாடுசெய்தார்கள்.

(5) 250 ot 1925 திருக்கடவூர் (Tirukkadavur)

விக்கிரமசோழனின் நாலாவதுவருஷம் திருக்கடவூரில் உள்ள சாதனத்தில் அருளாகரவாய்க்கால் என்ற வாய்க்கால் இருந்ததாகத் தெரியவருகிறது.

(6) 175 of 1919 திருபுவனி (Tirubhuvani)

மணவிலில் இருக்கும் அரும்பாக்கத்துக்கிழான் மதுராந்தகன் பொன்னம்பலக்கூத்தன் என்ற பொற்கோயில் தொண்டைமானார்விக்கிரம சோழனின் ஐந்தாம் ஆண்டில் அருளாகரஈசுவரமுடையாருக்குக் கோயில் கட்ட நிலம்கொடுத்ததாக ஏற்படுகிறது.

(7) 128 of 1896 மதுராந்தகம் (Madurantakam.)

விக்கிரமசோழனின் ஆறும் ஆண்டில் அருளாகரஈசுவரம் என்னும் சிவகாமத்தாற் கோயில் எடுத்தும் மண்டபமும் திருச்சுற்றுமாளிகையும் எடுத்துக்கட்டியும் திருநந்தாவனமும் மடைவிளாகமும் அமைத்தும் வேண்டுவன செய்வதற்கு நிலம் விடப்பட்டது.

(8) 367 of 09 சித்தலிங்கமடம் (Siddhalingamadam.)

ராஜேந்திரசோழனுடைய மந்திரியும் சபாநர்த்தகன், காலிங்கராயன், மாணுவதரான என்ற இதரபேர்கள் உடையவனுமாகிய மணவில் தலைவன் சித்தலிங்கமடத்தில் ஒரு சிவன்கோயிலைக் கட்டுவித்தார். இதிற் சொல்லப்பட்டிருக்கும் ராஜேந்திரன் என்பவன் முதலாவது குலோத்துங்கனுகிய இரண்டாவது இராஜேந்திரனுவான்.



(9) 473 of 1919 காஞ்சீபுரம் (Kanchipuram.)

நரலோகவீரன் என்பவன் அருளாளப்பெருமாள்கோயிலில் மடைப்பள்ளியும் மண்டபமும் திருச்சுற்றுமாளிகையும் கட்டுவித்தான் என்றும் அவன் கட்டிய புதுசுகோயிலிற் பள்ளிகொண்ட பெருமாளின் சிலையைப்பிரதிஷ்டைசெய்தான் என்றும் தெரியவருகிறது.

(10) 120 of 1888 சிதம்பரம் (Chidambaram.)

தொண்டையர்கோன், நரலோகவீரன், காலிங்கராயன், மணவிற்கூத்தன் என்ற அநேக பெயர்களையுடைய தொண்டைநாட்டுத்தலைவன் சிதம்பரத்தில் நடராஜப்பெருமான் கோயிலில் அநேகவிதமான திருப்பணிகள் செய்தான்.

(11) 369 of 1921 திருவதிகை (Tiruvadi.)

நரலோகவீரன் திருவதிகைத்திருவீரட்டானேசுவரருக்குச் செய்த திருப்பணியின் விவரம்.

(12) 98 of 08 திருப்புத்தூர் (Thirupputhur.)

பராக்கிரமபாண்டியனின் மூன்றாவது வருஷம். திருப்புத்தூர் மூலபௌரிஷையார், ஐயங்கொண்டசோழவிண்ணகராய் வார்கோயிலில் நரலோகவீரன் திருவெடுத்துக்கட்டியிற் கூடினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நரலோகவீரன்சந்தி ஒன்று. உய்யவந்தான் கண்ட தேவனை தேவர் காங்கேயன் ஏற்படுத்தினன்.

(13) 131 of 08 திருப்புத்தூர் (Tirupputhur.)

பராக்கிரமபாண்டியனின் பன்னிரெண்டாவது வருஷம், உய்யவந்தான் கண்ட தேவனை தேவர் காங்கேயன் திருப்புத்தூர்த் திருத்தளியாண்டார்கோயிலில் நரலோகவீரன் திருமாளிகை என்ற ஒரு கட்டிடஞ் செய்வித்தான்.

(14) 265 of 1927–28 நாங்குநேரி (Nanguneri).

மாறவர்மன் சுந்தரபாண்டியன் சாதனத்தில் மருவாய்க்குறிச்சிக்கு நரலோகவீரனல்லூர் என்ற வேறொருபெயருள்ளதாகத் தெரியவருகிறது.

## நரலோகனின் சரித்திரச் சுருக்கம்.

நரலோகவீரனைச் சிலர் பிறருக்குக் கீழ்ப்படாத முடிமன்னன் என்று கருதுகிறார்கள். ஆனால், அதற்கு ஆதாரம் இல்லை

சிதம்பரசாசனத்தில்

அபயனுக்கேயாக

மலைநின்றதொண்டையர்மன்" என்றும்,

திருவதிகைச்சாசனத்தில்,

"மண்முழுதுந்

தன்கோன் குடைநிழற்கீழ்த் தங்குவித்த வேற்கூத்தன், எங்கோன் மணவிலர் கோ" என்றும்,

"மண்ணைப் பொதுநீக்கித் தன்கோனுக் காக்கினான் தொண்டையர் கோனங்கு" என்றும் சொல்லியிருப்பதிலிருந்து இவன் அபயனாகிய முதலாவது குலோத்துங்கனுக்குச் சிற்றரசனாக இருந்திருக்கவேண்டும். இவன் குலோத்துங்கனின் இறுதிக்காலத்திலும் விக்கிரமசோழனின் கால முற்பகுதியிலும் இருந்திருக்கவேண்டும்.

இவனை மணவிற்கூத்தன் என்றும் அரும்பாக்கக்கிழான் என்றும் சாசனங்கள் கூறும். மணவில் என்பது தென்னார்க்காடுஜில்லாவிலுள்ள எயில் என்ற ஊராய் இருக்கலாம் என்று ஹுல்ஷ் (Hultzsch) துரை அபிப்பிராயப்பட்டார். ஆனால், அது சரியல்லவென்று அவர் பிற்பாடு தள்ளிவிட்டார் (S. I. I. II part III part 390) அப்படியிருந்தும் சிலாலேகை நிலய அறிக்கைக் (Epigraphical Report) அதைத் தழுவி எழுதுகிறார்கள். காஞ்சிபுரம் எயிற்கோட்டத்தில் உள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் மணவிலும் காஞ்சியும் ஒன்றே என்று கருதுவாரும் உளர். மணவிலும் எயிற்கோட்டமும் வேறென்பது நம்முடைய அபிப்பிராயம். தொண்டைநாட்டை முன்காலத்தில் 24 கோட்டங்களாகவும் 79 நாடுகளாகவும் பிரித்திருந்தார்கள் அவைகளில் மணலூர்க்கோட்டம் என்பதும் ஒன்று. அக்கோட்டத்தில் பாசாலி, இல்லத்தூர், கண்ணூர், புரிசை, பெருமூர் என்ற நாடுகள் இருந்தன. கல்வெட்டுக்களிலிருந்து ஜயங்கொண்ட சோழமண்டலத்து மணவிற் கோட்டத்தில் புரிசை, பாசாலி கண்ணூர், பழையனூர் பெருமூர், மணவில்



என்ற நாடுகள் சேர்ந்ததாகத் தெரிகிறது. இந்நாடுகளின் பெயர் கொண்ட சில கிராமங்கள் தற்காலத்து வடஆற்காடு, செங்கற்பட்டு ஜில்லாக்களில் இருக்கின்றன. ஆகையால், மணவில் என்ற ஊர் இப் பாகத்தில் இருந்திருக்கவேண்டும். மேலும், "தென்கரை மணவிற் கோட்டம் "(No. 86, S I I vol I) என்று சொல்லப்படுவதிலிருந்து இது ஒரு ஆற்றின் தென்கரையில் இருந்திருக்கவேண்டும். ஒருவேளை பாலாற்றின் தென்கரையில் இருந்திருக்கலாம்.

### அவனுடைய வீரச்செயல்கள்.

#### சிதம்பரசாதனம்.

(1) "ஒல்லை, வடவேந்தர் செல்வமெல்லாம் வாங்கவல்வாங்கும்"

(2) "தென்னர், மலைமன்னர், ஏனை வடமன்னர்,
குலமன்னர், செல்வமெல்லாம் கொண்டு"

(3) "தென்னவர்தம், பூவேறு வார்குழலார் சோரும் பொருப்பேற
மாவேறு தொண்டையர்மன.

(4) "கொல்லமழிவுகண்டான் சேரனைப் பரிய வாற்றற்கிழிவு
கண்டான்.

#### திருவதிகைச்சாதனம்.

(1) "தென்னர்குடமலை நாடறிந்து கொண்டவேறு கூத்தன்
கடமலைமால் யானையான் கண்டு."

(2) ................"தென்னாடன் சாலேற்றின் திண்செருக்கை
யனறமைத்தான் தொண்டையர்கோனங்கு."

(3) ................"பேரிற்
"கொல்லநாடு வெஞ்சினவேற் கூத்தன் குடகர
மலைநாடு கொண்டபிரான் வந்து."

(4) ................பூசல்,
"விளைவித்த வேணாடும் வெற்பனைத்துஞ் சத்திலவிளைவித்தான்
தொண்டையர் மன்." என்பனவாம்.

வடமன்னரைஜயித்தது என்பதிலிருந்து அவன் கலிங்கப்போரிற் சம்மந்தப்பட்டவன் என்று ஊகிக்கலாம். அவ்வாறு இருந்தால் கருணாகரத்தொண்டைமானுக்கு உட்பட்ட சேனைத்தலைவனாக இருந்திருக்கவேண்டும். இரட்டத்தும் ஒட்டத்தும் வீரக்கொடி எடுத்ததாகச் சொல்லப்படுகிறது. சோழனுடைய ஆற்றலை அழித்தவனென்றும் தென்னனாகிய பாண்டியனை வென்றானென்றும் தெரியவருகிறது. இவன் சாதனங்கள் பாண்டியநாட்டில் அகப்படுவதிலிருந்தும், குலோத்துங்ககாலத்தில உள்ள பாண்டிய அரசனாகிய பராக்கிரம பாண்டியன் சாதனங்களில் (No. 12 and 13) நரலோகசந்தி ஏற்படுத்தியதாகக் கூறுவதிலிருந்தும் பாண்டியநாட்டையும் குடமலைநாட்டையும், கொல்லத்தையும், கொங்கத்தையும், சோழசாம்ராஜ்ஜியத்துக்கு உட்படுத்தியவன் இவ்வீரனாக இருக்கவேண்டும். சிலாலேகை நிலய அறிக்கைகளில் நரலோகவீரன என்பது பராக்கிரமபாண்டியனின் பட்டப்பெயராக இருக்கலாம் என்றும், ஆகையால் இரண்டு நரலோக வீரர்கள் இருந்திருக்கவேண்டுமென்றும்கருதுகிறார்கள். (Madras Epigraphical Reports 1909—para 29 and 192 para 61).

ஆனால், இது பொருத்தமில்லை. பாராக்கிரமபாண்டியன் சாதனத்தில் நரலோகவீரன் என்றபெயர் வாய்ந்த சந்தி ஏற்பட்டிருப்பதிலிருந்து அப்பாண்டியராஜன் சோழனுக்கு உட்பட்டவனென்று கருதவேண்டும். மேலும், இவருடைய வீரத்தைச் சிலாகித்துப் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது.

.... .... .... "நாடு
பரியெடுத்த தூளி பகல் மறைப்பச் சென்றங்
கெரியெடுத்தான் றொண்டையா ரேறு"

.... .... .... "கோடிக்
குறித்தா ருடல் பருந்து கூட்டுண்ணக் காட்டி
மறித்தானந் தொண்டையர் மன்"

## திருப்பணிகள்.

சித்தலிங்கமடத்திற் சிவன்கோயிலும், காஞ்சீபுரத்தில் அருளாளப் பெருமாள்கோயிலும் கட்டுவித்ததாகத் தெரியவருகிறது. ஆனால் அவருடைய முக்கியமான திருப்பணிகள் சிதம்பரத்திலும் திருவதிகையிலுமே. சிதம்பரத்தில் நடராஜப்பெருமானுக்குத் திருக்கொடுங்கை பொன்வேய்ந்தான். பொன்னம்பலத்தைச் செம்பொன்னால் வேய்ந்தான். பேரம்பலந்தன்னைச் செம்புமேய்வித்தான். பாலமுது செப்வித்தான். ஆயிரம்நாழிநெய்யால் ஈசனை ஆடும்படி கண்டான். ஞானக்குழைந்தளித்த சிட்டப்பெருமான் திருப்பதியம் முட்டாமை கேட்போருந் மண்டபத்தைச் செய்தான். நூற்றுக்கால்மண்டபத்தைத் தில்லைப்பிரானுக்குச் செய்தமைத்தான். தற்காலம் சிதம்பரம் சிவகங்கைக்கு மேற்காகவுள்ள 100 கால் மண்டபத்திலுள்ள கற்றூண்களிற் சிலவற்றில் 'விக்கிரமசோழன்' என்றபெயர் வெட்டப்பட்டிருக்கிறது. இதிலிருந்து விக்கிரமசோழன்காலத்தில் நரலோகவீரனால் நடராஜப்பெருமானுக்குக் கட்டுவித்தது இந்த நூற்றுக்கால்மண்டபந்தான் என்று கருதப்படுகிறது. தில்லைப் பெரிய திருச்சுற்றுமாளிகை எல்லைக்குலவரைபோல் அமைத்தான். புட்கரணி கல் சாத்துவித்தான். தில்லை மறைமுடிப் பார்வதி மடஞ்சமைத்தான். மூத்திறத்தார் ஈசன் மூதம்பிரத்தைப் பாடியவாறு ஒத்தமைத்த செப்பேட்டினுள் எழுதிவித்தான நல்ல திருநந்தாவனமும் சமைத்தான் மாசிக் கடலாடி வீற்றிருக்க மண்டபமும், பெருவழியும் அமைத்தான். திருவளர் எல்லையில் பேரிக் கெழில் மதகு கல்லினால் அமைத்தான். அவ்விதமே திருவதிகையில் நூற்றுக் கால்மண்டபமும், மடைப்பள்ளியும் நந்தாவனமும், யாகமண்டபமும், பேரேரியும், செய்வித்தான். முத்தணிகள் சாத்தினான். பொன்னால் பரிகலம் செய்தான. குராற்பசுவைஞ்ஞூறு கொடுத்தான "நீடுமதிகையான் நித்தல் பெருங்கூத்தை" ஆடும் அரங்கமைத்தான்.

இத்தகைய தர்மங்களால் "கண்ணகன்ற ஞாலத்தஞ் செய் நரலோகவீர" னென்றும் பொன்மழையோ டொக்கத்தருங்கொடையோன்" என்றும் புகழ்பெற்றான்.

## கருணாகரத்தொண்டைமானும் நரலோகவீரனும்

கருணாகரத்தொண்டமானை வண்டைநகர் சேர்ந்தவனென்றும், "மறைமொழிந்தபதிமாபின்வந்த குலதிலகன்" என்றும், "நரலோகவீரனை மணவிற்கூத்தனென்றும், அரும்பாக்கத்துக்கிழானென்றும், "வெள்ளாண் குடிமுதலான் தொண்டையர்கோன" என்றும் கூறுவதால் இவ்விருவரும் வேறானவர் என்று கருதவேண்டும்.

Chidambaram. S. R. Balasubramaniyan, B A, L.T.

ஸ்ரீ:

# மதிப்புரை.

---

மூவடிமுப்பது மூலமும் உரையும்:— மூவடிமுப்பதென்பது மூன்றடியானமைந்த முப்பது பாடல்களுடையதொரு சிறிய தமிழ்நூலாகும். கடைச்சங்கப்புலவராகிய இடைக்காடனாரால் இஃது இயற்றப்பெற்றதென்பர்.

உலகத்துமக்கட்கு உறுதிபயவாதன என்று ஆன்றோரால் கடியப்பட்ட கொலையும், புலையும், குடியும், சூதும் போன்ற தீயொழுக்கங்களினும் நன்மை விளையும் பக்கம் உண்டென அரிதாகநிறுவுதல் இந்நூலின் பெரிதாயநோக்கமென்று தெரிகிறது. ஆகையால் இதன் பொருளுரைகளெல்லாம் பொய்யில்கேள்விப் புலமையுடையோரால் நுணுகியாராய்தற்குரியன.

"இந்நூல் சங்கப்பலகையை நிலைகுலைத்த இடைக்காடன்பாட்டு" என்றற்றொடக்கத்தனவாய் இதன முகப்பிலமைந்த பழைய பாயிரவாக்கியங்களால், கீழ்க்கணக்காகிய சங்கத்துச் சான்றோர் செய்யுட்கு இஃதோர் எதிர்நூலாமென்பது உய்த்துணரத்தகும். ஆகவே, கற்றுவல்ல சான்றோராகிய இடைக்காடனாரியற்றியதெனினும், அவரால் இது மற்றொரு கோட்பாடுபற்றிச் செய்யப்பட்டதென்க.

"இன்பமும் பொருளும் அறனு" மென்றாங்கு ஆசிரியர் தொல்காப்பியர் களவியலிற்கூறிய முறையே முறையாகக்கொண்டு ஒழிபு ஒன்று கூட்டி நான்குபகுதியாக இந்நூல் யாக்கப்பெற்றுள்ளது. இன்பக்கூறு ஐந்தும், பொருட்கூறு பத்தும், அறக்கூறு பத்தும், ஒழிபுக்கூறு ஐந்துமாகிய இதன் முப்பது செய்யுட்களும் தனித்தனி முப்பது விடயங்களை உணர்த்துகின்றன. அவற்றுள், 'காண்மூளைப்பெருக்கம்' என்பது ஒன்று. அதனைக்கடியும்முறையினை இக்காலத் தொருசாரார் கையாளுதற்கு முயன்றுவரும் இக்கோட்பாடும், தொன்றுதொட்டதென்று தோன்றுமாறுவைத்து இங்குக் கூறப்பட்டிருப்பது மிகவும் வியப்பைத்தருவதாகும். இது நிற்க.



இந்நூலின் பழையவுரை மிகச்சுருக்கமாகவும் தெளிவாகவும் விடயங்களை விளக்கிச்செல்கின்றது. அவ்வுரைக்கு உரையாகிய குறிப்புரையோடு, நூன்முகமும் ஆசிரியர் வரலாறும் மற்றும் பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களும் நன்குவரையப்பெற்று திரு. மதுரை சுந்தரபாண்டிய ஓதுவாரவர்களால் இப்புத்தகம் பிழையறப்பரிசோதித்துப் பதிக்கப்பட்டுள்ளது. இப் பகுதிகளெல்லாம் பதிப்பாசிரியரின் கல்வியும், கேள்வியும், கட்டுரைத்திறமும் ஆகியவற்றை நன்கு புலப்படுத்துகின்றன. [illegible] குலத்தில் பிறந்து அறிவாற்றல்படைத்த ஓதுவாரவர்கள் இதுபோ[illegible] தமிழ்ப்பணி பல புரியுந் கருதியுடையராகையால், அவர்க்கு ஊக்க[illegible] டாக வுதவுதல் தமிழ்மக்கள் கடமையாம்.

"ஆன்றநன்மனத்தராய் நின்றோர்வார்க்கு இந்நூல் ஆன்[illegible] னளிப்பதாய், அஃதில்லாதார்க்கு ஏற்றவாறு பயனளிப்பதோ[illegible] கருவியாய் நிற்பது" என்னும் நோக்கத்துடனேயே பதிப்பாசிரியரால் இஃது வெளியிடப்பெறுவதால், இதனைப்படித்துப் பயன்கோடல் யாவர்க்கும் அவரவறிவினளவாக அமையற்பாலது. எவ்வாறாயினும் இன்னனம் மிகவும் அருமைவாய்ந்த இந்நூலினைப் பயிலவேண்டுமென்னும் அவா தமிழன்பர் ஒவ்வொருவருள்ளத்தும் குடிகொள்ளுமென்பது சொல்லாமையே அமையும். இதன் விலை அணா 8; வேண்டுவோர் "ம. சுந்தரபாண்டிய ஓதுவார்; ஓதுவார் சந்து, கீழச்சித்திரை வீதி, மதுரை" என்ற விலாசத்திற் பெறலாம்.

2. தமிழ்ப்பேரகராதி:— சென்னைச் சர்வகலாசங்கத்தின் ஆதரவில் அச்சிடப்பெறும் இதன் நான்காந்தொகுதியின் மூன்றும்பகுதி இப்பொழுது வெளிவந்துள்ளது. இதில் 'நியமிதம்' என்பது முதல் 'பஞ்சிகாணம்' என்பது முடியவுள்ள சொற்களுக்கு வழக்கம்போல் மேற்கோள்களுடன் தெளிவாகப் பொருள்விளக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இவ்வகராதிவேலையின் முக்கால்பாகம் முடிந்துவிட்டது. எஞ்சியபகுதியும் இனிதுநிறைவேறி, என்றென்றும் உலகிற்கு நிலையான பயனளிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 160 பக்கங்கொண்ட இந்த சஞ்சிகையின் விலை ரூ. 2. 'C. குமாரசாமிநாயுடு அண் ஸன்ஸ், ஜார்ஜ் டவுன், சென்னை' என்ற விலாசத்திற் பெறலாம்

3. தமிழ்க்கடல் வெளியீடு:— சென்னை திரு. கா. நமச்சிவாய முதலியாரவர்களால் தொடர்பாக அச்சிடப்பட்டுவரும் இதன் மூன்றும் புத்தகம் இப்பொழுது வெளியாகிவிட்டது. இதில் வாக்குண்டாம்,

நல்வழி, நன்னெறி, நீதிசாரம் என்னும் நான்கு சிறிய நீதிநூல்கள் அடங்கியுள்ளன. இவற்றுள் முன்னைய மூன்றற்கும் தனித்தனி முன்னுரையும், பதவுரை பொழிப்புரைகளும் பதிப்பாசிரியர் எழுதியிருப்பதோடு, பள்ளிச்சிறுவரும் தெள்ளிதினுணர ஒவ்வொரு செய்யுட்கும் எழுவாய் பயனிலைகளை எடுத்துக்காட்டி இலக்கணக்குறிப்பும் சேர்த்திருக்கின்றனர். இறுதியிலுள்ள நீதிசாரம் என்னும் நூல் எளிய நடையுடையதாகையால் அதற்குக் குறிப்புரைமட்டில் எழுதப்பெற்றிருக்கிறது. நன்னெறியின் முன்னுரையில் சிவப்பிரகாசசுவாமிகளின் சரித்திரம் மிகவும் நன்கு விளங்குகின்றது. மற்றும் பயன்படக்கூடிய பலகுறிப்புக்கள் இப்புத்தகத்தில் ஆங்காங்கு அமைந்துள்ளன. சுமார் 220 பக்கங்களுடையதாய்த் தடித்தகாகிதத்தில் அழகாக அச்சிட்டுக் கலிக்கோ கட்டடம் செய்யப்பெற்ற இதன் விலை ரூ. 1 "மானேஜர், தமிழ்க்கடலாபீஸ், சாந்தோம், சென்னை" என்ற விலாசத்திற் பெறலாம்.

4. இன்னிலை:—இஃது அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு பால்களால் பற்பல நீதிகளை உரைக்கும் அரியதொரு தமிழ் நூலாகும். இது பதினெண்கீழ்க் கணக்கினுள் ஒன்றென்றும், ஆழ்வார்கள் பன்னிருவரில் ஒருவரான பொய்கையார் இதன் ஆசிரியரென்றும், இதனைத் தொகுத்தவர் மதுரையாசிரியரென்னும் பெயரினரென்றும், கடவுள் வாழ்த்து இயற்றினவர் பாரதம்பாடிய பெருந்தேவனாரென்றும் சொல்லப்படுகிறது. திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் இதற்கு விருத்தியுரை ஒன்றெழுதி, விரிவான முன்னுரையுடனும், ஆசிரியர் வரலாறு முதலிய குறிப்புக்களுடனும் இதனை இரண்டாம் பதிப்பாக இப்பொழுது அச்சிட்டிருக்கிறார்கள். இந்நூலின் முதற் பதிப்பான ஆயிரம் பிரதிகளும் சிலமாதங்களிற் செலவாயின என்பதே தமிழன்பர் இதனை மிக விரும்புவதற்கு அறிகுறியாகும். இதன் விலை ரூ 1. வேண்டுவோர் திரு, வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள், பிளீடர், கோவில்பட்டி என்ற விலாசத்திற் பெறலாம்.

5. காலி டமாரம்:—இது, ருஷியஞானியாகிய 'டால்ஸ்டாய்' என்பவரால் எழுதப்பெற்ற மிகவும் அரியதொரு சிறுகதையின் தமிழ் மொழிபெயர்ப்பு. ஸ்ரீமான் அ. சுப்பிரமணிய ஐயரவர்கள் இதன் ஆசிரியராவர். விலை அணா 2. வேண்டுவோர் சேலம் ஜில்லா, ஓமலூர், V. C. உயர்தர பாடசாலையில் ஆசிரியரவர்கட்கு எழுதிப் பெறலாம்.

---



வெள்ளிடை நிவந்த மேதகு சுவலினை
யுள்ளுயிர்ப் பேடையை யுறையுளி னிருத்திப்
பாலுணீர் தெரித்துப் பருகுமொண் சேவ
லாலுநீர்ச் சிறைபுக் காய்ந்திரை கொணர்வலென்
றிகழ்[1]தற விடைப்படிர் தெழுமயர் வுயிர்ப்பான்
வாலுக வைப்பென மறுகுபு குறுகிவீழ்ந்
தன்மையிற் றவக்குற் றச்சப் பார்வையிற்
புராதனப் பொய்கையுட் புகும்புன லூர
பொருவரு தாமரைப் புதல்வனைப் பயந்த
திருமறு மார்பினன் றிருவரங் கத்துட்
பொதுகலப் பெண்டிர் பொதுவுணின் மார்ப
மல்ல னீர்படிர் தல்லது
புல்லேர் தீண்டலெம் [2]பொன்னடிப் போதே.

இதுவு முருவுவமப்போலி. இதன் வேறுபாடுங் காண்க. பகுதி—இதுவுமது. துறை—அணைந்தவழியூடல். பா—இதுவுமது. (அ)

50 ஓங்கிய குரம்புசா ருவளக வயின்வயின்
வீங்கிய திணிதோண் மிடலுடை மள்ளர்
சுதைபெய் தாற்றலிற் சுடுமண் பன்முறை
ததைவுறப் படுத்த சால்பிற் றெண்ணீர்
வார்ந்துகு கவர்முழை மதகுபடர் குடுமியிற்
சேர்ந்தசை வறவிரு சிறகரு மொடுக்கி
மறைபுகு நோக்கின் மனப்பட் டிமையாற்
றுறைபுகு கயலினைச் சோர்புகண் டெடுத்துக்
கூர்வாய் வெண்சிறைக் குரண்ட மென்பெடைக்
கார்வா யெனவருத் தியினருத் தபுதுடித்
தயல்வீழ் வதனையாங் கற்றம் பார்த்து
மிச்சிலென் றறிந்தும் விழுசெறி யொரீஇ
நச்சியுண் புலவு நாற்றத் தோடுஞ்
செங்கால் வெள்ளுயிர்ச் சேவ லோதிம
மொருசிறை யிருந்த வோவாச் செவ்வி

(மாறனலங்காரப்பாடம்.) [1]தய விடைப், [2]பொன்னடிச் சுவடே.

யிருசிறைப் [1]பெடையுறை யெழின்மலர் குறுகு
நளிமலர்ப் பொய்கை நல்வய லூர
திருநெடு மாயன் றிருவாங் கத்துப்
பொருணசைப் பரத்தையர் பொறித்தநின் மார்பிற்
றனக்குறி யாகிற் றழுவுபு சிதைவுறின்
மனக்கிட னிழைப்பது மன்றி
நினக்கிட ருறுமா னெருங்கலெம் மிடனே.

என்பது பிறப்புவமப்போலி, பகுதி—இதுவுமது. திணை—பெண்பாற் பெருந்திணை. துறை—பள்ளியிடத்தூடல். பா—இதுவுமது. (௯)

51 விசும்பு தூர்த்தெழு வியன்சினை மாத்தின்
பசும்புறத் தீங்கனி பரீஇநுகர் கடுவன்
புரப்பவர் குறுகுபு புலம்புரீஇப் பொங்க
ரிரிந்தலம் போதரு மீர்ந்தண் சோலையுட்
புளிங்கறி வேட்டபுன் [2]றொழின்மையர்க் குறாது
பழிப்பின் றுகப் பாகுசெய் தட்ட
கோதறு மான்பாற் குழம்புபொற் கலத்தினுட்
பெய்திருந் [3]தாறிய பெற்றி போல்
முடவடிப் பலவின் [4]மூட்புறக் குடக்கனி
வேர்முதற் பழுத்து விரிந்தபொற் றீஞ்சுளை
பதனழி பான்மைப் பாய்புன லூர
நூற்கடற் பழகிய நுண்ணுணர் வுடையோ
ராற்றலிற் பாவுசீ ராங்கனுக் கமைந்த
பாற்கடன் முற்றப் பருகுதற் கெழுந்த
போராப் பெரும்பசி யாளர்தம் முன்ன
ராரா வள்ளத் தமுதமைப் பவர்போற்
சிறுவரை யின்பத் துறுதுய ரிழைத்தற்
கொத்த லிஃதியல் பன்றாற்
பரத்தையிற் பிரிதனின் பண்பா கும்மே.

இஃது "உள்ளுறை யுவம மேனை யுவமமெனத்—தள்ளா தாகுந் திணையுணர் வகையே" என்பதனால், புளிங்கறிவேட்ட புன்றொழின் மையர்க்குப் பாற்குழம்பு பொற்கலத்தினுட் பெய்திருந்தாறியபெற்றி

(மாறனலங்காரப்பாடம்.) [1]பேடை யெழின்மலர். [2]றொழிற்றன் மையர்க்குத். [3]தாறும் பெற்றி யேய்ப்ப. [4]முதிர்பொற் குடக்கனி.



போல வென்று புலப்படக்கூறு மேனையுவமம் புலப்படக்கூறாத உள்ளுறையுவமத்தினைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத் ததனோட் கூடிநின்றது. "விரிகதிர் மண்டிலம் வியல்விசும் பூர்தர" வென்னு மருதக்கலியுள்ளும், "நனிவிரைந் தளித்தலி னகுபவண் முகம்போல" என்ற வினையுவமந் தாமரைமலர் பனிவாரத் தளைவிடுமென்ற வுள்ளுறை யுவமத்தைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்துநின்றது. அன்றியும், "உடனுறை யுவமஞ் சுட்டுநகை சிறப்பெனக்—கெடலரு மரபி னுள்ளுறை யைந்தே" என்ற பொருளியற்சூத்திரத்தாற் சிறப் பென்ற வுள்ளுறை. இவ்வேனையுவமம் உள்ளுறையுவமத்திற்குச் சிறப் புக்கொடுத்து உள்ளுறையுவமம்போலத் திணையுணர்தலைத் தள்ளா து நின்றவாறு காண்க. இது பரத்தையிற் புணர்ந்துவந்த தலைவன் [illegible] கண்டேடிய காமக்கிழத்தி, வடியவாறுகண்டு சார்ந்த தலைவனுடனூட[illegible] கின்றாள் கூறியது. இதனுள், தலைவி, தோழி, காமக்கிழத்தி, உழையா ரென்போர்கூற்று வந்தன. ஒழிந்தோர்கூற்றும் வந்தவழிக் கண்டு கொள்க. இவை பத்தும் நேரிசையாசிரியப்பா. (௫0)

52 திரைகொழித் துயிர்ப்பன திகழ்வலம் புரியே
வலம்புரி யுயிர்ப்பன வாணித் திலமே
நித்தில முயிர்ப்பன நெடுவெண் ணிலவே
நிலவுற வடர்பிணி நெகிழ்வன குமுதங்
குமுதமங் குயிர்ப்பன குளிர்தெண் ணறையே
நறைநதி
சுழித்தெடுத் தனவாய்த் துறைதொறுந் துறைதொறுந்
தெழித்துயிர்ப் பனவுங் குறுமணித் திரளே
மணித்திரள்
பரிதிபோன் றிரவினைப் பகற்செய் வனவா
லருகுநின் றலர்வன வம்புய மலரே
மலரிணை
அளகமர் புறவினு ளான்புன லுண்மரீஇக்
குளகென மாந்துபு குழக்கன் றுள்ளலும்
உள்ளிப்
படர்வுழிப் படர்வுழிப் பணைமுலைத் தளைவழிக்
குடமடித் தீம்பால் குளித்திரு நிலத்துற

அப்பால்
ஆறிரண் டெனப்பகுத் தலைத்தெழு நனந்தலை
வீறுடை னெக்கர்கூர் வெண்மணல் வெள்ளிடை
நள்ளிடை
மதியக டுரிஞ்சிய மழைதவழ் பொதும்பர்ப்
புதியமென் மலரிணைப் பூத்த சாயா
வைகலுஞ்
சொரிதரு நாண்மலர் துவன்றுயர் நீளிடை
விரிவன வாகி விழுமிதின் விளங்கும்
அத்திறம்
பாலா ழியினடுப் பரிமள வாவணை
மேலாய் விழிதுயில் விமலனைப் பொருவருஞ்
சங்கணித்
துறைபயில் பொருநைச் சொற்றமிழ்க் குருகூ
ரிறைவநின் பொன்னடி யிறைஞ்சுகே னின்னும்
நானிலத் தொருபிறப் புனதா னனகர்
மானிடப் பிறவியி லானுரு வெனலா
மதுமுத லியபெறற் கரியன வெளிமையிற்
பொதுவற வெய்திநிற் புகழ்புல வனெனப்
பருமணி குயிற்றிய பசும்பொற் கும்பத்
தருண்மலி மஞ்சன மாடிய காலையி
னுத்தம வீரவா டையுமுறக் கொலியலு
மத்தக வடைந்தவ ணலங்கரித் தெழுதிருக்
கைத்தலச் சேவையு முத்திரைக் காமுஞ்
சித்திர நாமியிற் செறித்தகைத் தலமும்
புத்தமு தனையசெந் தமிழ்மறைப் பொருள்புண
முத்தமுந் திருப்பவ ளமுங்குறு மூரலு
மறத்துடைத் தொளிர்முழு மதிமுகச் சோதியு
முறப்புடைத் திருக்குழை யுருவமும் புருவமும்
நயனமர்ந் தருள்புரி நயனமும் புயமு
மயன்முதன் மதித்தபத் மாசனத் திருப்பும்
வகுளா பரண மார்பமு மவுலியு



முகுளா இணைவிழி முழுதுறு காட்சியிற்
கூடிய வுணர்வொடுங் குழைந்தெழி னுவாற்
பாடிநின் றாடியும் பன்னாள் கழிந்தபின்
பொருவில்பே ரின்பமும் புணர்வான்
ஒருவரந் திருவுள முவந்தருள் கெனவே.

இது நாற்பத்தைந்தடியா யிடையிடை தனிச்சொற்பெற்று நேரிசையாசிரியப்பா. என்னை? "சீர்கூ னாத னேரடிக் குரித்தே" என்ப தனாலறிக. (௧௧) திணை—பாடாண். துறை—கடவுள்வணக்கம்.

53 கார்கதழ் பரிநெடுந் தேரின்முந் தியதாற்
காகோ தரவணைக் கண்டுயி னெடுமால்
கார்வா னத்துகு மாரியும் வலவா
காரிகை மையுண் கண்கலுழ் மாரியுங்
காமனங் கணைமலர் பொழிநறை மாரியுங்
காட்சிமுந் நீரிற் கலந்திவ ணெதிர்கொளுங்
காலுருள் கொடாதனை யறிந்தொரு கணவரை
காணுதி யவணுறக் கடாவுதி யிரதங்
காவலுன் னுயிர்க்கினி யதுவே
காவலின் றெனதுயி ருறுதுயர்க் கடற்கே.

இதுவும் நேரிசையாசிரியப்பா. இஃ தடிதோறும் முதலெழுத் தொன்றிவரத் தொடுத்தமையா னடிமோனைத் தொடை. பகுதி—பொருள்வயிற்பிரிதல். துறை—பாகனொடு கூறல். (௧௨)

54 அணங்கனை யுறையுளென் பதுந்தா மரையே
சுணங்குலா மிளமுலை துணைத்தா மரையே
யொளிர்முக மரங்கனுந் தியந்தா மரையே
தெளிதரின் மதர்விழி செந்தா மரையே
தொடிக்கையுந் துணைத்தா மரையே
யடிச்சுவ டணியிழா யலர்தா மரையே.

இஃ தடிதோறும் எழுத்தானுஞ் சொல்லானும் ஒன்றிவரத் தொடுத்தமையா னடியியைபுத்தொடை. பகுதி—சேட்படை. துறை—அவயவங்கூறல். (௧௩)

55 அராவணை மிசைத்துயி லமர்ந்தரு ளரங்கனைக்
கராசல மூலமென் றழைத்தருள் கண்ணனை
முராரியை யிரணியன் மதுகையை முருக்கிய
நாரியை நயந்திறைஞ் சினரே
தாரதலம் விரும்புமந் தாமமெய் துவரே.

இஃ தடிதோறும் இரண்டாமெழுத் தொன்றிவரத்தொடுத்தமை யான் அடியெதுகைத்தொடை. (கச)

56 செந்தா மரைமகள் புணர்திரு வரங்கன்
கார்க்கடல் வண்ணன் கண்ணனெம் பெருமான்
வாமனன கேசவன் மாதவன் சீதரன்
நெடியோ னீரடி யெனநில மளந்தோன்
அடியிணை நறுமல ரதுவாய்
முடிமிசை தரிப்பவர் முத்தரா குவரே.

இஃ தடிதோறுஞ் சொல்லானும் பொருளானும் முரணத்தொடுத்தமையா னடிமுரண்டொடை. (கரு)

57 ஆஅ னிரைகாத் தருளரங் கேச
னீஇ னிறக்கரி நிழன்மருப் பொடித்தோன்
பூஉ மகள்புணர் புயலடித் துணையிற்
றேஎ மலரிடு மவர்வினை
போஒ மொருநொடி யினிற்புறக் கொடுத்தே.

இஃ தடியளபெடைத் தொடை. (கசா)

58 நாவே [1]விழுமிய கலனுடை முதற்பொருள்
பொருளுரை யாய்தரிற் புகலமற் றுளதே
யுளதே வண்டியி ருறுமல ரோடை
யோடை மால்வரை மூலமென் றுரைசெய
வோடை மால்வரை மூலமென் றுரைசெய
வுரைவிசைத் தடங்கா வொல்லையிற் குறுகுபு
புனிற்று வெனவருள் புரிந்திடர் செகுத்த

(மாறனலங்காரப்பாடம்.) [1]யானுறு கலமிகு.



வறைபுன லாங்கத் தமுதினை யன்றியு
மதித்தொரு [1]முதலினை மகிழ்ந்து
துதிப்பது முளதோ சார்பெரு நாவே.

இதனுள் நான்கந்தாதித்தொடையும் வந்தமையா னந்தாதித்தொடை. ([illegible])

59 திடனே திடனே திடனே திடனே
யிறைதிரு வரங்க னென்பது
மறைமுத லரியென வாழ்த்திய துறினே.

இஃதோரடிமுழுது மொருசொல்லேவரத் தொடுத்தமையா னிரட்டைத்தொடை. (கஅ)

60 மாறனை யேத்தார் விழுதீ நாகிற்
சுடுநெறி யினியார் செல்வர்
விடலைநீ கங்கு லாறியே குதியே.

இது மோனைமுதலாய முழுது மொவ்வாதுவந்த செந்தொடை. நேரிசையாசிரியப்பா. (கக)

தொடைவிகற்பம் வருமாறு:—

61 இரவினி லிருள்கடி முழுமதி வதன
மிதுசிறு பிறைநுத லிவைமுரி புருவமி
வினமணி நிரையென வணிநகை யிலகிய
திணைவிழி யிருகய லிணைபணி மொழிநறை
யிளமுலை மரைமுகை யிடுகிடை யிலையா
லிலைவயி றிமிழ்வளை களமெனு மிருநில
மிமையவ ரிறைவனொ டிரதிம னிருடிகண்
மணமரு டகைமட வரலெனு மமுதினொ
டளிமுரன் மதுமலி மணிவர முனிவரை
யளவிய கலனிவ னலைமதனு
மவனெனை யெதிருரை யினனுப பமனே

இதனுள் இணைமோனைமுதலிய விகற்பமேழும்வந்தமை காண்க. ()

(மாறனலங்காரப் பாடம்.) [1]முதலையே.

62 அறமுத லரியெனு மவனே பரனே
யணுவினு ளவனே செகமுணர் பரனே
மனனே கசிசொல வருபுயல் பரனே
பருதரு வினனே யவனே பரனே
நிலனே வானே நிறைமுதல் பரனே
வலனே தரிதிகி ரியனே பரனே
யயனே சிவனே யயனே பரனே
யின்னண மமைதா விறையாங் கேசனைப்
பொன்னடி பணிபவர் புருபதி
பன்னருஞ் சிறப்பிற் பாந்தா மமதே.

இதனு ளிணையிணைபபு முதலாயின வெழுவிகற்பமும் வந்தமை காண்க. (உக)

63 முற்றுண னுற்பவ மாதவின் முழுமுதல்
பொற்கம லத்திரு முற்ற முயங்கிய
வற்புத னாண னுமென வுற்றபி
னற்றது பற்றெனி லுற்றது வீடுயிர்
செற்றது மன்னுறி லற்றிறை பற்றே
பற்றிலன் முற்றி லடங்கென நற்றமிழ்
கற்றவன் மற்றிரு பற்றறு கொற்றவ
னுத்தம ஞானமுத் திரைக்கையு முகமும்
பத்திமை யாற்றெரி சிப்பவர்
சித்தர்வந் ததிர்கொள முத்தா குவரே.

இஃ திணையெதுகைமுதலாய விகற்ப மேழும்வந்த நேரிசையாசிரியப்பா. (உஉ)

64 அறிவில ருணர்வுள செனுமல ரளவினி
லருவமொ டொளிர்திரு வுருவம துடையனை
யெளியனை யடியவர்க் கேனையோர்க் கரியனைக்
கனவினு நனவினு மறிதுயிற் கண்ணும்
வெண்சங் காழி செம்மணிப் பொன்முடி
காலையு மாலையுங் கண்டேன் பகலினு



மின்புறத் துன்பமற் றிம்பரொ [1]டும்பரு
ணறவார் மலர்மக ளுதனை
மறவா தவர்பதம் [2]வாழ்த்துமென் னுவே.

இஃ திணைமுரண் முதலாகிய வெழுவிகற்பமும் முறையே வந்தமையான் முரண்விகற்பத்தொடை. (உ௩)

65 காஅல் வாஅய் மூலமென் றழைப்பச்
சாஅல் புணர்ந்து தாஅன் விரைதலின்
காஅ லெனநிமிர் கலுழனிற் போஒ
யாஅழ் நீஇர் வாஅழ் முதலையி
னுஅ ருயிருண் கோஒ மாஅன்
றூஉ தாஅர் பூஉமகள் சேஎர்
மோஒ கூஉர் மாஅ மாஅ
லெனவொரு காலுரை நாவே
நமையொரு காலமு நண்ணு னமனே.

இஃ திணையளபெடை முதலாகிய எழுவிகற்பமு முறையானே வந்தமையா னளபெடை விகற்பத்தொடை. ஆகத் தொடைவிகற்பம் முப்பத்தைந்தும் வந்த இவையு மோர் பதின்மூன்றும் நேரிசையாசிரியப்பா. (உச)

66 கடுவே கடலெனக் [3]கருநெடுங் கண்ணிணை
காமனுங் காமுறுங் காட்சிய காண்முகங்
கிள்ளையின் [4]கிளவியுங் கிளைத்தகைக் கிளையுடைக்
கிரமுங் கீர்த்திக் கிரமுங் கிரோ
குவடுடைக் குளிர்பொற் குன்றே குவிமுலை
கூர்புதற் கூன்சிலை கூற்றுயிர் கூட்டுணுங்
கெடலருங் கெழுதகை கெழுமுபு கெழீஇய
கேகயங் கேளொடுங் கேடுறுங் கேழியல்
கைபுனை கைக்கிளை கைக்கிணை கைத்துணை
கொண்டலுட் கொண்டன கொண்டையுங் கொடியிடை
கோடாக் கோவலர் கோற்றொடி கோமான்

(மாறனலங்காரப் பாடம்.) [1]மேம்பர், [2]வழுத்துமென், [3]கார்நெடு, [4]கிளையும்,

கௌரவ கௌசிகன் கௌசிகங் கௌத்துவ
மணியெனக் கொண்டுமுன் மனைவீ டளித்தோன்
கண்ணகன் குறுங்குடிக் கனவரை
மண்ணகத் துறையுளாய் வளர்நில மகட்கே.

இது சகரவருக்க முற்றுமோனைத் தொடை. இதுவும் நேரிசை யாசிரியப்பா. (௨௫)

67 தேமகிழ் மார்பன் றடரியஞ் சிலம்பிற்
றாமரை மலருங்
காமரு குவளையுங்
கோங் கரும் பிணையும்
பூங் கரும் பிணையுந்
தாமணி பூங்கொடி தருமனக் களியே.

இஃ தாறடித்தாய் முதலடியு மீற்றடியு மளவடித்தா யிடையிற் குறளடி யிரண்டுஞ் சிந்தடி யிரண்டுமாக வந்த இணைக்குறளாசிரியப்பா. துறை—காட்சி. அலங்காரம்—உருவகவாய்பாட்டான்வந்த வுடனிலைச் சிலேடை. (௨௬)

68 படுதிரைப் பௌவமும் பானலம் போதும்
விடுசுடர்க் கதிர்வா விரிமரை மலருங்
கடுவுங் கணையும்
வடுவும் பிணையு
மடுபோர்க் கூற்றின் கணிச்சியுங்
கொடுவே லிணையுங் குறிக்கொளுந்
தடுமா றுண்கட் டாழ்குழ லாயத்
தொடுவாழ் வெய்திட முபரிட தப்பொரு
ணெடுவாய்த் தமிழ்மறை நவின்றருண் மாற
னெடுமால் வரைச்சர் தனத்தண் ணிழலே.

இதுவும் பத்தடித்தாய் முதலிரண்டடியு மளவடித்தாகியு மீற்றினில் நாலடியு மளவடித்தாகியு மிடையிற் குறளடி யிரண்டாகியுஞ் சிந்தடி யிரண்டாகியும் வந்த இணைக்குறளாசிரியப்பா. அலங்காரம்—பலபொருளுவமை. பகுதி—பாங்கற்கூட்டம். துறை—இயல்பிடங்கூறல்.()



69 *வெண்டிரைப் புனற்கா விரியயல் விரிந்த
வண்டியிர் பாசடைக் குவளைமென் பனிமலர்
முட்டாட் டாமரை முறுக்குடை நாண்மல
ராக்கெறி வள்ளித ழாம்பற் போதுடன்
மெய்தரு கயவாய் மேதிகன் றுள்ளுபு
பணைமுலை சாந்து பனிற்றுபாற் றடினி
னெட்டிலை யாம்பையி னீடுபொற் கூன்கனி
முடவடிப் பலவின் முட்புறக் குடக்கனி
நெடுவெண் டிங்க ணடுமறுத் துடைத்திடுஞ்
செந்தளிர்ப் பொங்கர் மாவின் றீங்கனி

---

* இச்செய்யுள், மாறனலங்காரத்திற் பின்வருமாறு காணப்படுகிறது.

வெண்டிரைப் புனலரு வியலயல் வயல்விரி
வண்டிமிர் பாசடைக் குவளைமென் பனிமலர்
புறக்கொடை மதிதாப் பொதியவிழ்ந் ததுபோய்ச்
சிறக்கணித் தனவாஞ் சேயிதழ்க் குமுத
முட்டாட் டாமரை முறுக்குடை நாண்மலர்
கட்கா மருகடை வாய்வழிந் திழிதா
மெய்தரு கயவாய் மேதிகன் றுள்ளுபு
பணைமுலை சாந்து பனித்தபாற் றடினி
நெடுவெண் டிங்க ணிறைமறுத் துடைத்தொளிர்
செந்தளிர்ப் பூஞ்சினைத் தேமாத் துருகனி
முடப்பரி யலைப்பலா முட்புறக் குடக்கனி
புறக்காழ் மரகதப் பூக மிடற்றி
னிறக்காழ் திரண்டு நீண்டுதிர் பழுக்காய்
நெட்டிலை யரம்பையி னீடுபொற் கூன்கனி
புதையிரு ளீரிக்கதிர் பொழிதவ மணிக்குலை
சுழித்தெடுத் திரைத்தவாய்த் தூமலர் பலகொடு
பாற்கடல் பொன்னியுட் படிதிரு வுருவங்
காண்பதின் முன்னிய காட்சியொன் றெனலாய்த்
துறைதொறுந் துறைதொறுந் துழனியின் வலைக்குந்
திருவரங் கேசனைத் திருமறு மார்பனை
மனத்துற நினைந்தும் வாழ்த்தியும் வணங்கு
நெக்குலத் தெவரே யாயினு
மக்குணத் தவர்க்கடி யேனடி யேனே. (77)

சுழித்தெழு திரைக்கையிற் றாமலர் பலகொடு
பாற்கடல் பொன்னியுட் படிதிரு வுருவங்
காண்பதின் முன்னிய காயர் காட்சியிற்
றுறைதொறுந் துறைதொறுந் துழனியின் விளக்குந்
திருவரங் கேசனைத் திருமறு மார்பனை
வாழ்த்தியும் வணங்கியு மனத்துற நினைக்குந
*ரெக்குலத் தவரே யாயினு
மக்குலத் தவர்க்கடி யேனடி யேனே.

இது, நிலைமண்டிலவாசிரியம். (இதனுள்) அடைசினை முதலென முறைமூன்று மயங்காமை வந்த வண்ணச் சினைச்சொல். அலங்காரம்—(இது) தற்குறிப்பேற்றவுவமை. திணை—பாடாண். துறை—நகர்வாழ்த்து.

70 வான்றிக ழுதய மதிமழை முகிற்கிழ்
மீன்றிரி தமர வெண்டிரை வைப்பினு
ளருவியஞ் சுவண வருவரை ஞாங்கர்
வாழ்திற மெனலாய் வதனமு மோதியுங்
காழ்புனை திதலைமென் கதிர்முலைச் சுவடு
முறப்பமைந் தோவிய முயிர்படைத் தியங்குத
லறியா தாங்க ணணிவரைச் சாரலிற்
செறியா வுடைந்ததென் றிண்ணிய நிறையே.

இதுவும் நிலைமண்டிலவாசிரியப்பா. பகுதி — பாங்கற்கூட்டம். துறை—உற்றதுரைத்தல். அலங்காரம்—நிரனிரையுவமை. (௬௰)

71 மன்னோர் நின்றனன் வடமலை மிசையே
முன்னே சிலர்தொழ முயல்வது கண்டே
பொன்னே யலவிடு வதுமொரு பூவே
யென்னே சிலரெவ னாகெய் துமதே.

இஃ தடிமறிமண்டிலவாசிரியப்பா. திணை—பாடாண். துறை—கடவுள்வாழ்த்து. அலங்காரம்—சுவையினு ளிழிவுபற்றிய வழுவமை. ()

* இது முச்சீரடியாயிருத்தலால் 'இது நிலைமண்டிலவாசிரியம்' என்னும் குறிப்புடன் பொருந்தாதிருத்தல் கவனிக்கத்தக்கது.



72 பதிகளி னதிபதி திருமகள் பதியே
துதிகளி னதிபதி தமிழ்மறைத் துதியே
மதிகளி னதிபதி மாறனுண் மதியே
நதிகளி னதிபதி வரசுர நதியே.

இதுவும் அடிமறிமண்டிலவாசிரியப்பா. திணையுந் துறையு மிதுவுமது. அலங்காரம்—சாரம். (௬௧)

73 தண்ணறுங் கடப்பந் தார்ச்செவ் வேளொனு
மொண்மையுங் காந்தியு முயர்குடிப் பிறப்பும்
வாய்மையுங் குறையிரந் தொழுகலும் வண்மையுந்
தூய்மையும் வைகலுந் தொடர்பிடை விடாமையு மல்லாற்
கன்னலின் வளமலி கழனிநன் னாடும்
பொன்னெடுங் குன்றமும் புரவல புரப்பினுங்
கலைபயின் மாறன் காரிதந் தருள்கார்
மலைவளர் மயிலனை யாட்கு
முலைவிலை யாமென மொழிதலொல் லாவே.

இது நேரிசை யாசிரியப்பா. இதனுள், 'தூய்மையும் வைகலுந் தொடர்பிடை விடாமையு மல்லா'லென நாலாமடி யைஞ்சீரடியாய்வந்தது. இதன் வேறுபாடுங் கண்டுகொள்க. இது அலங்காரம்—விரியுவமை. பகுதி—வரைபொருட்பிரிதல். துறை—அருவிலைசெப்பல். (௬௨)

74 கண்ணன் வானோர் பெம்மான் கார்போல்
வண்ணன் மோகூர் வைகும் மாயோன்
றண்ணந் தாமந் தாரான்
விண்ணின் றிங்கட் கென்செய் வேனே.

இது, நேரொன்றாசிரியத்தளையான்வந்த நேரிசையாசிரியப்பா. திணை—பெண்பாற்கூற்றுக் கைக்கிளை. துறை—கையறல். அலங்காரம்—அவயவியுவமை. (௬௩)

75 மறைநவின் மறைமொழி வகைமயர் வறவுறு
முறைதரு தமிழ்மறை மொழிமகிழ் முனிவனை
யிறையென வுணர்பவ ரெவரவ
ருறைபதி மலர்மக ளுறைபா லுலகே.

இது நிரையொன்றாசிரியத்தளையான்வந்த நேரிசையாசிரியப்பா. (இது) திணை—பொதுவியல். துறை—பொருண்மொழிக்காஞ்சி. அலங்காரம்—சுவைபிறுள், கல்விபற்றிய பெருமிதம்.* (௧௪)

---

## ஆசிரியப்பாவினம்.

76 கஞ்சத் திருமால் கழல்பரவு மாறனார்
செஞ்சொற் றிருவாய் மொழியுணர்ந்த சீலத்தார்
வஞ்சப் பிறவி வலைப்பட் டுழலாரே.

ஆயத் தருமா லடிபரவு மாறனார்
நேயத் திருவாய் மொழியுணர்ந்த ஞானத்தார்
மாயப் பிறவி வலைப்பட் டுழலாரே.

தந்திக் கருண்மால்பொற் றாள்பரவு மாறனார்
சிந்தித் துரைத்ததிரு வாய்மொழிதேர் சிற்குணத்தார்
வந்திப் பிறவி வலைப்பட் டுழலாரே.

இவை மூன்றடியாய்த் தம்மு ளளவொத்து ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவந்தமையா லாசிரியத்தாழிசை. இவற்றின் திணையுந் துறையும் அலங்காரமு மது. (௧)

77 இருநில மூவடி யெனவளர்ந் தோங்கிய
திருமறு மார்பனைச் சிந்தையுள் வைப்பவ
ரொருபொழு தினுமிட ருறுவதொன் றிலரே.

இது, தனியே வந்த ஆசிரியத்தாழிசை. இதுவும் திணையும் துறையும் அலங்காரமும் அது. (௨)

---

*இதன்பின், "இனி, கோயிற்கலம்பகத்தன், 'கரைபொரு தொழுகும் காவிரி யாறே' என்னு மகவல்போல இடையிடை தனிச்சொற்பெற்று முதலே அடி—௫—அந்தாதிப்பதாக வோரகவல் பாடவேணும். இரண்டாவது இவ்விரண்டடியாய் எழும் எட்டுத்தான மாகி க—ந் தரனம் ஆறடியாய் நேரிசை யாசிரியப்பாவாய்ப் பாடவேணும். ஆசிரியப்பா முற்றும்" என்று வட்டுப்பிரதியிற் காணப்படுகிறது.



78 அலைபயில்பாற் கடல்கடைந்தன் றமுதளித்த திருமங்கைத்
தழுதை யேத்துங்
கலைபயில்வண் டமிழ்க்குருகூர் மகிழ்மாறன் வரையனையீர்
கட்ப டாந்தீர்
மூலையெனுமான் மதக்களிற்றின் முன்னிறுத்தி வினையேனைக்
கொலைபயில்வேல் விழிபுதைத்த தறநிலையோ வறநிலையோ
கூறு வீரோ.

இது, நான்கடியாய் ஈற்றயலடிகுறைந்து அல்லாத அடி ஒத்துவந்த ஆசிரியத்துறை. பகுதி—பாங்கற்கூட்டம். துறை—நாணிக் கண் புதைக்கு வருந்தல். அலங்காரம்—சங்கிரணம். (௩)

79 திரைத்திருப்பாற் கடல்கடைந்து தெள்ளமுதம் பருக்களித்த
திருமால் செய்கை
யுரைத்திருப்பா ரிடத்திழைத்த வூழ்வினைசென் றணுகாதென்
றுரைப்ப தொன்றோ
வுரைத்திருப்பா ரிடத்திழைத்த வூழ்வினைசென் றணுகாமை
வரைத்திருப்பா ரிடத்திழைத்த வல்வினையும் வரைத்தவர்பான்
மருவா தன்றே.

இஃ தீற்றயலடிகுறைந் திடைமடக்காய்வந்த ஆசிரியத்துறை. திணை—பாடாண் துறை—கடவுள்வாழ்த்து. அலங்காரம்—கல்விபற்றிய பெருமிதம். (௪)

80 வண்ண மகிழ்மாறன் மால்வரைமா னனைத்துட்
கண்ணென் றிகல்புரிவன் கூற்றினையேன் வைத்தானென்
கண் ணு ளானுங்
கண்ணென் றிகல்புரிவன் கூற்றினைவைத் தாலபலா
ருண்ணின் றுயிர்கவர்வ துள்ளா தென வெளிவிட்டா
ரானுள் ளாரே.

இது நான்கடியாய் இடையிடைகுன்றந் திடைமடக்காய்வந்த ஆசிரியத்துறை. பகுதி—இயற்கை. துறை—தகையணங்குறுத்தல். அலங்காரம்—அவயவியுருவகம். (௫)

81 சேடுவோன் கலைவயிரத் திழைத்தபருப் பதக்குடுமி நீவ னாரு
மோடுவோன் மதியகட்டி னுறுபிணையைப் பிணையெனக்கொண்
[டும்பர் வாவக்
கோடுவார்க்கிழிதருதெள்ளமுதவருவியிற்குழுமிக்கொடியனாரே
யாடுவார்மைந்தருமுண்டுண்பதுமத்தெள்ளமுதேபவர்களுளும்.

இஃது அறுசீர்க் கழிநெடிலடியான்வந்த ஆசிரியவிருத்தம். திணை—பாடாண். துறை—நாடுவாழ்த்து. அலங்காரம்—திரிவதிசயம். (௬)

82 படியின்மேற் படிந்தகதிர்ப் படைமீது கிளர்களையாம் பனிவண் டாடிக்
கடியுணீ லமுநறுமென் கமலமுஞ்சாய்த் துடன்கிடந்த காட்சி கூறி
னடியுமா தமுந்தழுவிக் கொழுநரொடுங் கலவியினி லழுந்தி யோர்தம்
முடியுமே தகவுடைநன் முகத்துறவைத் துடன்றுயிலு முறையே
[போலும்.

இதுவும் அது. துறையும் அது. அலங்காரம்—ஒருவயிற்போலி. ()

83 நிறந்தழைவான் கதிருணங்க வங்குரித்தங் குடன்வளர்ந்த
நீர்மைத் தாருந்
திறந்தழைசெங் கமலமுமிந் தீவரமு முடனுணங்குஞ்
செயலுந் தீந்தேன்
வறந்தரவண் டினந்துறந்த செய்கையுநீ ரவருறவின்
மாண்புங் கள்ளுண்
டறந்தவறித் திரிகளிய ருறவினிழி வையுமுணர்த்து
மமைதித் தாமே.

பாவினம்—இதுவுமது. துறையும் அது. அலங்காரம்—நிதரிசனம். (௮)

84 காழகிற் பொழிலுஞ் சந்தனப் பொழிலுங்
கமழ்நறுஞ் சண்பகப் பொழிலுங்
கோழரைக் கமுகு நாளிகே ரமும்பொற்
கோங்கும்வேங் கையுமலர்க் குருந்து
மாழையஞ் சுளைமுட் புறக்கனிப் பலவு
மாவுநா கமும்பனை மருதுந்
தாழையு மகிழும் வாழையுங் கரும்புந்
தனித்தனி தழைத்த [1]வெம் மருங்கும்.

இது, எழுசீர்க் கழிநெடிலடியான்வந்த ஆசிரியவிருத்தம். (௯)

85 மரவமுங் [2]கடமும் பனசமும் பிடவும்
வடவும மா தவியுமா தளமுங்
குரவமு மிலவுந் திலகமும் விளவுங்
கொன்றையுஞ் செருந்தியுங் குமிழு
மாசுநா வலுந்தான் றியுமரீ தகியு
மாமல கமுநாரந் தமுமாம்
[3]பிரமுமே லமுமார் மரமும்வே ழமுஞ்சம்
பீரமுந் தவன்றசால் பினவே. (௧௦)

இதுவு மது.

86 வள்ளையங் கொடியு முல்லையும் விரைமென்
மயிலையு மிருபுடை மயங்கிக்
கொள்ளைவண் டினம்பாண் முரன்றறு பதத்தாற்
குடைந்ததே மதுமடை திறக்கு
முள்ளுடைக் கொழுந்தாட் கமலமும் விரவி
முறுக்கவிழ் குவளையு மிரவின்
விள்ளிதழ்க் குமுதத் தொகுதியும் பகுதி
விளைக்கும்வா விகள்பல பலவே.

இதுவு மது. இவை மூன்றும் நாடுவாழ்த்து (த்துறை). அலங்காரம்—இடத்தன்மை. (௧௧)

---

(மாறனலங்காரப் பாடம்) [1]தெம்மருங்கும். [2]கடம்பும் பனசமு மருதும், [3]பிரமுமே லமுஞ்சண் பகமும்வே ழமுஞ்சம் பீரமுந் தழைந்தன வொருசார்,

87 தாழிதடங் கடலகடா யொலிக்குந் தண்ணந்
 தளிதருதீம் பாறயிராய்த் தலைப்பெய் *கோவாப்
பாழிநெடுங் கிரியெனுமந் தரமத் தாகப்
 படநாகம் வடமாகப் பரந்த தேவர்
வாழியிருந் தெள்ளமுதங் கடைநா ளாழ்ந்த
 வயிரவரை யிணைக்கமட வடிவா யேந்து
மாழிபுனைந் தெழுதடக்கைப் பெம்மான் றொண்டர்க்
 கடியவரா நிலைமையரென் னடிக ளாவார்.

இது, எண்சீர்க் கழிநெடிலடியான்வந்த ஆசிரிய விருத்தம். துறை—கடவுள்வாழ்த்து. அலங்காரம்—வினைத்தன்மை. (கஉ)

88 வெற்றானென் றிசையாது சாவா மூவா
 விழுமருந்†தொண்டுறக்கமெய்வானோரைச்
செற்றானென் றிசைகனக னிங்கு ளானோ
 சிறுவவென மதுகைநர சிங்க மாகிப்
பொற்றாணெட் டகடுகிழித் தவன்ற னாகம்
 போழ்ந்துகிரா லளைந்துகுடர்ப் புண்ணீர் மாலை
கற்றாணம் பொருவுதிர டிண்டோள் வேய்ந்த
 கருணைவரைக் கடிமைசெயுங் காட்சி யாரே.

இதுவும் எண்சீர்க் கழிநெடிலடியான்வந்த ஆசிரியவிருத்தம். இதுவும் துறை—கடவுள்வாழ்த்து. அலங்காரம்—அவயவவுவமை. (கங)

89 தேனிலங்கும் பைந்தாம மாலை மார்பிற்
 றெசாதனன் மகவாகித் திண்கான் மேவி
வானிலங்கொ ளேழுமரா மாமும் வாலி
 மார்பகமு மிலங்கேசன் மவுலி பத்து
மானிலத்தன் றிழிதரவோர் வாளி தூவி
 நன்னுதலா ளுடன்கூடி மீளவ லென்போன்

*கோவாம் என்றிருப்பிற் பொருள் பொருந்துவதாம்.

† 'தொன்றுண்டுறக்க'. மென்றிருப்பிற் பொருந்துவதாகும்.



றனிலங்கா புரம்புரப்பக் களித்த வென்றித்
 தனுராமன் றனக்கடிமை தழைந்து ளாரே.

இதுவும் எண்சீர்க்கழிநெடிலடியான்வந்த ஆசிரியவிருத்தம். துறை—இதுவும் கடவுள்வாழ்த்து.' அலங்காரம்—வீரம்பற்றிய பெருமிதம். (கச)

90 உடைமணியுங் கிண்கிணியுங் கறங்கா வண்ண
 மொதுக்கிமழ வொன்றுடனு ளற்ற நோக்கி
யிடைமகளிர் மனையிடைபுக் கதன்பொற் றோண்மீ
 தேறிநிமிர்ந் திடக்கையுறி பிடியா மற்றைப்
புடைமலர்க்கை கொடுவெண்ணை தொடுவுண் டந்தப்
 புதல்வனுக்கும் பகுந்தருத்திச் சிக்க நோக்கிற்
கடையன மணிவாயில் பற்ற நின்ற
 காட்சிநினைந் தாடுவார் பாடுவாரே.

இதுவு மது. அலங்காரம்—வினைத்தன்மை. (கரு)*

91 பொலந்தளிர் பிளிர்தரப் பொறையுயிர்த் துலவா
 நலந்தழைகோங் கரும்பரும்பி நறைததும்பு நறுநெய்தன்
 மலர்ந்துளபொற் புடைக்கமல மலர்ந்தெதிர்ந்தோர் மம்மர்கோய்
 புலந்தனவாஞ் செழுங்காந்தள் பொருவில்கொழுங் குமிழினொடு
 மலர்ந்தளிதாய் மணமல்கி யமைந்தபொனங் கொடிமன்னோ.

இஃ தைந்தடித்தரவு.

 நான்முகத்தோன் றனக்கமைத்த நவையறுபொற் பினவாகும்
 வான்முகத்தும் வளர்பொழிற்கண் வளர்வதுதா னுளதென்றோர்
 தூன்முகத்தும் வியப்புறவே நுவல்வதுமொன் றிலதாயும்;

 வெண்டிரைப்பாற் கடல்பயந்த விழுமியதெள் ளமுதருந்து
 மண்டர்தம ரியப்புவனத் தமைந்துள்ளவைந் தருவகத்துங்
 கண்டனமென் றொருபனுவல் கழறியதொன் றிலதாயும்;

* ஏட்டுப்பிரதியில் இதனையடுத்து, 'பொலந்தளிர்' என்ற முதற்குறிப்புடைய செய்யுளும் அதுபற்றியகுறிப்பும் எழுதப்பட்டு கசு என்று எண்கொடுக்கப்பட்டுளதாயினும், (கரு) என்பதன்பின் ஆசிரியப்பாவினம் முற்றும் என்று வரிப்பினெழுதப்பட்டிருக்கிறது.

தத்து திரைக் கடல்வளைத்த தரணியினள் ளிடையாக
வைத்தவிரு சுடர்வலஞ்செய் வடவரையின் மருங்காய
வுத்தரதிக் கினும்பனுவ லுரைத்துளதொன் றிலதாயும்;

எங்கோன்,

இவற்றுள், முன்னைய மூன்றும் மூன்றடித்தாழிசை. ஏனையது தனிச்சொல்.

அருட்புயன் மாற னருவியங் குடரிப்
பொருப்பினுட் கண்டவற் புதத்தான்
மருட்கையின் வயத்ததாய் மகிழுமென் மனனே.

இது, மூன்றடியாய்வந்த நேரிசையாசிரியப்பாவாலிற்ற சுரிதகம்.

இது, அகநிலையொத்தாழிசைக் கலிப்பா. பகுதி—இயற்கை. துறை—காட்சி. அலங்காரம் உருவகவாய்பாட்டால் வந்த உடனிலைச் சிலேடை.

---

## கலிப்பா.

92 கோலலங் குளிறுதிரை கெழுகடன்முற் றகன்ஞாலத்
தாலால மிசைபவள வருவரையுங் கருவரையுந்
[1]தமவெனவாங் கமைத்ததொழிற் றன்மையுட னொருதலையா
யெமதெமதென் றெதிருனரின் னுயிர்செகுத்தீத் திருநோக்கிற்
கடைசிவந்து [2]வரிபார்த்து கவின்பெறுவார் குழைபோழ்ந்த
வடிபுரைமாண் [3]மதர்மழைக்கண் மதிபுரைவா ணுறுநுதா அல்;

இஃ தாறடித் தரவு.

இடந்தழுவுங் குனிசிலைக்கை யிகன்மறவர் [4]தொடுகணையோ
டுடன்றெழிலொண் சுடர்வடிவேற் குணவாத லொருதலையாற்
றொடர்ந்தெழுகின றமரேற்செண் பகமாறன் றுணையடிசேர்
திடர்[5]தழுவுந் ததியரெனத் தெறலருநன் கருளுவனே;

(மாறனலங்காரப் பாடம்) [1]தமிதமியென் னதுவெனலாங் தவலருமாண் டொழிற்றன்மை. [2]கருமையவாய்க். [3]மதர்மலர்க்கண். [4]கொடுங்கணையோ டேன்றெழிலென். [5]தழுவு ததியரெனத் தெருளுறநன்.



55

வாட்டானைத் தறுமறவர் வயிரவழற் [1]பிழம்பெறிகட்
கோட்டானை யுடன்வரிலென் கூரிலைவே லவர்மார்பிற்
றீட்டாநை வினையளிப்ப னுமரேற்றிவ் வியனுளபத்
தோட்டானைத் தொழுமாறன் றொண்டரினன் கருளுவனே;

குளிர்மதிவா னகடுரிஞ்சுங் கொடித்தேரின் குழுவினொடு
மொளிதிகழ்வன் படைமறவ [2]ருடன்றெழில்வைவ் ததிவேலாற்
களிபயில்வெங் தொழில்புரிவ னுமரேல்வண் கருணைச
[3]னளிபயினன் மகிழ்மாற னடியரினன் கருளுவனே;

இவை மூன்றும் நான்கடியாய் ஒருபொருண்மேல் அடுக்கிவந்த தாழிசை.

எனவாங்கு,

[தனிச்சொல்]

காணுதி காணுதி கனவிதெற் கெழினுங்
தாணுவி னில்லதவ றினுந்தவ றுவுரை
குன்றுசூழ் கூர்ம்பாற் [4]கொடுநெறி
யொன்றுநீ யழுங்கலு நறலே குதியே.

இது நான்கடியாய் நேரிசையாசிரியப்பாவினு லிற்ற சுரிதகம்.

இது, தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகமென்னும் நான்குறுப் பினு மிழுக்கின்றாய்வந்த ஒத்தாழிசைக் கலிப்பா; என்னை? "ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே, கொச்சக முறமொடு கலிநால் வகைத்தே', "அவற்றுள், ஒத்தா ழிசைக்கலி யிருவகைத் தாகும்", "இடைநிலைப் பாட்டே தரவுபோக் கடையென, நடைபயின் றொழுகு மொன்றென மொழிப"* எனபவாதலின் உணர்க. இதனை யாப்பருங் கலக் காரிகையார நேரிசையொத்தாழிசைக் கலிப்பா வென்ப. அலங் காரம்—சுவையினுட் பெருமிதம். என்னை? "கல்வி தறுக ணிசைமை கொடையெனச், சொல்லப் பட்ட பெருமித நான்கே"† என்றாராகலின். பகுதி—உடன்போக்கு. துறை—அடலெடுத்துரைத்தல். (௪)

(மாறனலங்காரப் பாடம்.) [1]பிழம்புகுகட். [2]ருடங்கெழின். [3]னளிதிகழ்தே மகிழ்மாற. [4]கொடுநெறிக், கொன்று.

*தொல். பொருள். செய்யுளியல் 130—132.

†தொல். பொருள். மெய்ப்பாட்டியல் 9.

93 அண்டாண்ட பகிரண்ட முழுவதுமீன் றகத்தடக்கிக்
கொண்டபெரும் பாழினுக்கு ஞாங்கராய்க் குளிறுதிரை
மண்டுபெரும் புனல்விரசைக் கப்புறத்தாய் மதிலெட்டோய்
தொண்டரினம் பேரின்பத் துறைபயிலந் தாமத்து
ளருணவிளங் கதிருதய மலகிறந்தொன் றியதொன்றாத்
திருமணிமண் டபத்தினுளிந் திரையுடன்வீற் றிருந்துளாய்;

இஃ தாறடித்தரவு.

• இலகியவான் சுடர்விளக்கி னெழுத நுபல் பந்தமென
வுலகொருநான் கினுமதன்க ணொருநால்வ ரொனும்படித்தாய்
நிலவலயத் தடைவடைவே நிரைத்துளதீ விருமூன்றுஞ்
சுலவியபாற் கடலாவிற் றுயிலுவந்த வொருமுதலாய்;

மீனுவ தாரமுதன் மேதினிமேல் வருகற்கி
தானுகி யுனக்குமொரு தந்தைதா யுளவெனலா
யூனார்பைக் குரம்பையினே டெங்கோறு முகந்தோறு
மானுதிங் களைபருவத் தங்குமமை பவனுகி;

ஏழ்வகைத்தாய்நால்வகைத்தோற்றத்திசைந்தமிழைத்துளதம்
மூழ்வகைத்தா யலம்போது முயிர்கடோறும் பிரியாது
வாழ்வகைத்தாய்ப் புனல்சொரிந்து மலர்தூவி வழிபடுதற்
காழ்கடற்பா ரடியவர்பா லங்கங்க கமர்ந்துளாய்;

இவை மூன்றும் நான்கடியா யொருவிகற்பத்தான் வந்த தாழிசை.

பேதமையா லிறந்துபிறந் துழல்வனெனப் பேதுறு
மூதறிவா ரழியாத முதல்வனெனத் தெளிந்துளாய்;
சாபத்தா லிழுக்குறாத் தலைமையாய் சாபமடைந்
தாபத்தா யினர்சரணெ ன்றடைதருமாங் கருள்புரிவாய்;

இவையிரண்டும் ஈரடியிரண்டப்போதரங்கம். (இவை பேரெண்.)

வேதனுமுற் றுணர்வலெனி லறிவரிய மேன்மையாய்;
ஆதரவுற் றிடுமெளியர்க் கறிவெளிய பான்மையாய்;
நினைபவர்தா நினைவுறுமவ் வுருவமதாய் வெளிநிற்பாய்;
அனைவருங்கண் டால்வியப்புற் றுசிபகர்ந் தெழுபொற்பாய்;

இவைநான் குஞ்நாற்சீரோரடி நாலம்போதரங்கம். இவை அளவெண்.



திகிரியை யுயர்வலந் தரித்துளாய்;
திகழ்வரி வளையிடம் பரித்துளாய்;
புகர்முக மதமலை சொலச்செல்வாய்;
பொருமுத லையினுயிர் செலக்கொல்வாய்;
இரணியன் மார்பது பிளந்துளாய்;
இருநில மூவடி யளந்துளாய்;
அரணிய லார்கலி யடைத்துளாய்;
அதனிடை யெழுமதிள் புடைத்துளாய்;

இவை யெட்டும் முச்சீரோரடி யிடையெண்.

| | |
|---|---|
| தேனிமிர் துளபத்தாய்; | மறைமொழி யினுமெட்டாய்; |
| சேனைம துளபத்தாய்; | வரைபொரு ஞரையெட்டாய்; |
| ஈனா திடமெய்தாய்; | உறைதயி ரதுகட்டாய்; |
| ஏழுமெழு மரமெய்தாய்; | உரைபுகழ் பலகட்டாய்; |
| அலகையி னுயிர்கொன்றாய்; | அகன்மலை கவிகையுளாய்; |
| அறனல தருகொன்றாய்; | அழல்பொரு கவிகையுளாய்; |
| உலகம துறுதுப்பாய்; | சகடம துதைமைந்தாய்; |
| உரவிடை யடர்துப்பாய்; | தகவின ருளமைந்தாய்; |

இவை பதினாறும் இருசீரோரடிச் சிற்றெண்.

எனவாங்கு,

[தனிச்சொல்.]

பாத்துவ முதலாப் பாந்துள வைந்தாய்
வாத்துடன் மூவுரு வாகிய வாத
திருக்குரு கூரின் றிருவடி வழுத்து
மெங்கோன் றிருமகிழ் மார்பின னியற்றமி
ழூழிதோ றாழியெவ் வுலகினும்
வாழிய தாக வளர்க்கநீ யெனவே.

இஃ தாறடித்தாய் நேரிசையாசிரியப்பாவினுலிற்ற சுரிதகம்.

இது, தரவு தாழிசை எண் தனிச்சொல் சுரிதகமெனும் [illegible]
னுல் வந்த வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா. என்னை? '[illegible]ற,

தேவர்ப் பராஅ முன்னிலைக் கண்ணே', 'அதுவே, வண்ணக மொருபோ கெனவிரு வகைத்தே', 'வண்ணகந்தானே, தரவே தாழிசை யெண்ணே வாரமென், றந்நால் வகையிற் றோன்று மென்ப', 'தரவேதானும், நான்கு மாறு மெட்டு மென்ற, நேரடி பற்றிய நிலைமைத் தாகும்', 'ஒத்துமூன் றாகு மொத்தா ழிசையே'. (ஒத்த தாழிசையை ஒத்தாழிசை யென்றது வினைத்தொகை.), 'அடக்கியல் வாரந் தரவொ டொக்கும்' முதற்றொடை பெருகுமன் னெண்ணே', 'எண்ணிடை யொழித லேதமின்றே, சின்ன மில்லாக் காலையான'* என்பவற்றான் உணர்க. இவ் வாறு வரும் வண்ணகவொத்தாழிசையினுள் இருசீரோரடிச் சின்னம் பதினாறும் ஒருசீரோரடியாய் வருவனவும் உள. அவை:—'உறைபதியி னுடனயனை யுந்திப்பாற் படைத்தோயு, மறைகடல்சூழ் நிலமுதலா யனைத்துலகும் புரப்போயும்'† என்னும் வண்ணகவொத்தாழிசையினுள் மூன்றடித்தாழிசை மூன்றும், 'வானுநீ; நிலனுநீ; மதியுநீ; விதியுநீ; தேனுநீ; அமிர்துநீ; திருவுநீ; உருவுநீ; அன்புநீ; அருளுநீ; ஆதிநீ; அந்தநீ; இன்பநீ; துன்பநீ; இன்மைநீ; உண்மைநீ;' என ஒரு சீர்ச் சின்னம் பதினாறுமாக வந்தவாறு காண்க. 'கெடலரு மாமுனிவர்'‡ என் னுங் கலியுள் மூச்சீரோரடி யிடையெண்ணினையும் இருசீரோரடிச் சிற்றெண்ணினையும் ஒருசாராசிரியர் இருசீரோரடியாகவும் ஒருசீராகவும் அளபெழாம லமைத்தவாறுங் கண்டுகொள்க. இவ்வாறு வரும் வண்ணகவொத்தாழிசையினை ஒருசாராசிரியர் அம்போதரங்கவொத் தாழிசையென்று கூறுமாறும் உணர்க. (உ)

இனி வண்ணகமென்பது அராகமென வுரைத்து அவ்வுறுப்புடை யன வண்ணக வொத்தாழிசை யெனவுஞ் சொல்வர். வண்ணித்துப் புகழ்தலால் வண்ணகமாயிற்றென்ப துணராதே. அன்றியும், எல்லா வாசிரியருஞ் செய்த வழிநூற்குத் தொல்காப்பியம் முதனூலாதலின் அவரொடு மாறுகொளக்கூறலாம் அது ஆதலால் அது தொல்காப்பியர் நோக்கமன்றென வுணர்க. அதற்குஞ் செய்யுள் வருமாறு :—

* தொல். பொருள். செய்யுளியல். 138--142, 144—146.

† ஷை ஷை ஷை சூ. 146 ம் சூத்திரவுரைபார்க்க.

‡ ஷை ஷை ஷை ஷை ஷை

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் ... ... ... | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| *7. | தோத்திரத்திரட்டு ... ... | | | |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி [illegible] முடிய. முதற்பாகம் | 6 | 0 | 0 |
| | ஷை இரண்டாம்பாகம் [illegible] ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் [illegible] ... ... | 5 | 0 | 0 |
| *9. | அபிதானசிந்தாமணி ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளி[illegible] (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் [illegible] ... ... | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் [illegible] ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா [illegible] ... ... | 0 | 5 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார [illegible]ராய்ச்சி ... | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| * | சங்கப்புலவராற்றுப்படை உரையுடன் ... ... | | | |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

## செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது உரையுடன் ... ... | 0 | 8 | 0 |
| 2. | களவழி (5) இனியவைநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| •3. | வளையாபதிச்செய்யுட்கள் ... ... | | | |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | 0 | 12 | 0 |
| *7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | | | |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ... | 0 | 8 | 0 |
| •9. | அநுமான விளக்கம் ... ... ... | | | |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 11.* | விவசாயரசாயனசாஸ்திரச்சுருக்கம் ... ... | | | |
| 12.* | பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 2 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 21.* | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | | | |
| 22.* | திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 23.* | விக்கிரமசோழனுலா ... ... ... | | | |
| 24. | குருமொழிவினாவிடை[illegible] ... ... | 0 | 1 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை | 0 | 8 | 0 |
| 28.* | சந்திராலோகம் | | | |
| 29. | சோழவம்சசரித்திரச்சுருக்கம் | 1 | 0 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் | 0 | 4 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு | 0 | 8 | 0 |
| 34. | அகப்பொருள்விளக்கம் | 1 | 4 | 0 |
| 35.* | திருமந்திரநூறுபாட்டுக்குரை | | | |
| 36. | உவமானசங்கிரகம் | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை | 0 | 2 | 0 |
| 39. | பழமொழி மூலமும் பழையவுரையும் (முதல் 100 செய்) | 1 | 0 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடுந் தமிழும் | 0 | 6 | 0 |
| 49. | கடைவள்ளலார்காலம் | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் | 0 | 6 | 0 |
| | ஷை ஆங்கிலத்தில் | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்க நிகண்டு | 1 | 4 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டு வெளியாகிவரும் "செந்தமிழ்"ப் பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 28 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்குமேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மிநாராயணையர், மானேஜர்.